




# தமிழரசு

16.3.1995 ரூ.3





VII SAF GAMES MADRAS '95





பாரதி சிவாஜி (மோகினி ஆட்டம்)



சித்ரா விசுவேசுவரன் (பரதநாட்டியம்)

# உலகத் தமிழ் மாநாடு:
## நாட்டிய நிகழ்ச்சிகளில் சில..

தனஞ்செயன் குழுவினர் (இராமாயண நாடகம்)



# இந்த இதழில்...


✦ மேதகு தமிழ்நாட்டு ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை . . . . . . . . . . . . . 2

✦ தவறான கருத்துக்களைப் பரப்பாதீர்! —மாண்புமிகு முதல்வர் அவர்களின் விளக்கக் குறிப்பு . . . . . . . . . . . 27

✦ நேதாஜி பிறந்த நாள் விழா . . . . . 31

✦ 'சுங்குவார் சத்திரம் சாலை விபத்து' . . . . . . . . . . . . . 34

✦ ஊக்கமும் நோக்கமும் —மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி அவர்கள் . . . 37

✦ ஆட்சி மொழி —திரு. எஸ். ஸ்ரீபால் அவர்கள் . . . 39

✦ சென்னையில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் . . . . . 41

✦ படமும் செய்தியும் . . . . . . . . . 46

✦ நூல் நயம் . . . . . . . . . . . . . . 48




## இதழ்தோறும் ஓர் இனியகுறள்

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

* மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன்வளம் குன்றிப் போகும் (17)


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு: 2026

பங்குனித் திங்கள்: 2

மலர்: 25 இதழ்: 18

16.3.1995

விலை: ரூ. 3



# தன்னிகரற்ற சாதனை படைக்கும் தமிழ்நாடு

மேதகு தமிழ்நாட்டு ஆளுநர்

**டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள்**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

1995 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு, 1994 ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும் முக்கியத்துவம் நன்கு பாராட்டப்பட்டுள்ளது. விரிவான பாதுகாப்பு நலத்திட்டங்கள் ஏழை, எளியோரின் நலனைப் பாதுகாத்து வந்துள்ளன. சிறப்பு நலத் திட்டங்கள் ஏழை, எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவியுள்ளன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோர்க்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அதற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பையும் பெற்றதன் மூலம், சமூக நீதியைப் பெற்றுத் தந்தது. 1994 ஆம் ஆண்டில் இவ்வரசின் அருஞ்சாதனையாகத் திகழ்ந்தது. இவ்வரசின் இன்னொரு மிகப் பெருஞ்சாதனை 1995 ஜனவரியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது ஆகும்.

3. சட்டம்-ஒழுங்கைச் மிகச் சிறந்த முறையில் பராமரிக்க, தலையாய முன்னுரிமை அளிக்கப்பட்டது. இவ்வரசு பதவி ஏற்பதற்கு முன் நிலவிய சட்டம்-ஒழுங்கு நிலைமையை அனைவரும் நன்கறிவர். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளால் உருவான அச்சுறுத்தல், பல்வேறு அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்தி, விழிப்புடன் தொடர்ந்து மேற்கொண்ட கண்காணிப்பு, ஒருமித்த, ஒருங்கிணைந்த நடவடிக்கை ஆகியவற்றால் திறம்படச் சமாளிக்கப்பட்டு வருகிறது. சிறுசிறு சம்பவங்கள் ஏற்பட்ட போதெல்லாம் மாநிலக் காவல்துறை அவற்றைத் திறம்படச் சமாளித்தது. எந்தச் சூழலும் கட்டுமீறிப் போகும் அளவிற்கு அனுமதிக்கப்படவில்லை. வழிப்பறி, கொள்ளை போன்ற சம்பவங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கண்டுபிடிக்கப்படாமல் இருந்த நெடுஞ்சாலைக் கொள்ளைகள், வழிப்பறிகள் குறித்த குற்றங்களைப் புலனாய்வு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறப்புப் புலனாய்வுக் குழுவை நியமனம் செய்தார். மொத்தம் 47 குற்றங்கள் துப்புத் துலக்கப்பட்டு ரூ.31.70 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வாறு குற்றங்கள் துப்புத் துலக்கப்பட்டது, குற்றங்கள் தொடர்ந்து நிகழாமல் தடுப்பதற்குரிய சிறந்த பயனுள்ள விளைவைத் தோற்றுவித்தது. தமிழ்நாடு மாநிலம், அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் பெயர் பெற்ற மாநிலம் என்ற மரபைப் பேணிக்காக்க, இந்த அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.



4. மாநிலக் காவல்துறையை மனிதாபிமானத்துடனும், கருணையுடனும் செயல்படும் ஓர் திறம் மிக்க அமைப்பாக உருவாக்கும் பொருட்டு, இதனை நவீன மயமாக்குவதற்குரிய விரிவான, பரந்த விளைவை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் பலவும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். காவல் துறையை நவீனமயமாக்குவதற்கான மாநிலத் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 1995 மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஜீப் வண்டி வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். ரூ.3.37 கோடி செலவில் கடற்கரையோரப் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ரோந்துப்பணித் திட்டம் ரூ.6.29 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. காவலர் வீட்டுவசதித் திட்டத்திற்குப் புதிய வலிவும் பொலிவும் அளிக்கப்பட்டுள்ளன. ரூ.28.50 கோடி செலவில் 1995 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள் 2002 வீடுகள் கட்டி முடிக்கப்படும். அனைத்து மாவட்டத் தலைமையிடங்களையும் உள்ளடக்கி அமையும் காவல் துறை கணினி மயத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள்



ரூ.54 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. காவல் துறையை வலுப்படுத்துவதற்கான பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 31 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு அனைத்து மகளிர் காவல்நிலையங்களைத் திறந்ததன் மூலம் ஏற்படுத்திய முன்னுதாரணத்தை ஏனைய மாநிலங்களும், வளர்ந்து வரும் பிறநாடுகளும் கூடப் பின்பற்றியுள்ளன. இந்த அரசு பதவியேற்றபோது, ரூ.80.45 கோடி செலவில் மாநிலக் காவல்துறையை நவீனமயமாக்குவதற்கான செயற்குறிப்பு, மத்திய அரசின் நிதியுதவி பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டது என்பதை இங்கு நினைவுகூரலாம். 1991–92 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.10 கோடி வழங்கியபோதிலும், மேற்கொண்டும் தனி நிதியுதவி எதுவும் பெறப்படவில்லை. மாநிலக் காவல்துறையை நவீனமயமாக்குவதற்கான பல்வேறு திட்டங்களுக்காக இந்த அரசு இதுவரை ரூ.43.08 கோடி வழங்கியுள்ளது. காவல்துறையை விரிவான முறையில் நவீனமயமாக்கும் பல்வேறு திட்டங்களை மாநில நிதியிலிருந்து செலவிட்டுச் செயல்படுத்துவதற்கு நிதி இடர்ப்பாடுகள் குறுக்கே நிற்க நாம் அனுமதிக்கவில்லை என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

5. நீதி நிருவாகத்திற்கு உயரிய முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்குமான ஒரு புதிய திட்டம் திட்டப்பணிகளின் கீழ்த் தொடங்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் இந்தப் புதிய திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.5.82 கோடி ஆகும். அண்மையில் மொத்தம் 17.23 கோடி ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இத் தொகை இராமநாதபுரம்,

வேலூர், கோபிசெட்டிப்பாளையம், தாராபுரம் மற்றும் பிற இடங்களில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டவும், 35 குடியிருப்புகள் கட்டவும் வகை செய்யும். உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டதன் பேரில், வழக்குகளை விரைவில் முடிக்க, அரசு, புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 43 நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், மாவட்ட முனிசிப்-நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களாக மாற்றியமைக்கப்படும். குடும்ப வழக்கு நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், 1994-95-ல் சென்னையில் ஒரு கூடுதல் நீதிமன்றமும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் ஆகமொத்தம் புதிதாக மூன்று குடும்ப வழக்கு நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத்திலுள்ள குடும்ப வழக்கு நீதி மன்றங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆக ஆகியுள்ளது. 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ள மாநிலச் சட்ட ஆணையம் தற்போதிருக்கின்ற சட்டங்கள் அனைத்தையும் விரிவாகப் பரிசீலனை செய்து சீரமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

6. தமிழ்நாடு கடற்கரைக்கு அப்பால் ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்து இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது குறித்து இந்த அரசு மிகவும் கவலை கொள்கிறது. இப்பிரச்சினை குறித்து ஸ்ரீலங்கா அரசிடம் எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் 3.11.94 அன்று மாண்புமிகு பிரதமருக்கு எழுதியுள்ளார். ஸ்ரீலங்கா கடற்படையினர் கடத்திச் சென்ற 20 மீனவர்களை விடுவிக்க இதில் தலையிடுமாறுகேட்டுக்கொண்டு, 15.2.95 அன்று நமது மாண்புமிகு முதலமைச்சர் மீண்டும் மாண்புமிகு பிரதமருக்கு எழுதியுள்ளார். மேலும், இனிமேல் இத்தகைய தாக்குதல்களை நடத்தாமலிருப்பதாக ஸ்ரீலங்கா அரசிடமிருந்து உறுதிமொழி பெறுமாறு நமது மாண்புமிகு முதலமைச்சர் மாண்புமிகு பிரதமரை மீண்டும்மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளார். 1990 முதல் இதுவரை இத்தகைய 165 நிகழ்வுகள் நேர்ந்துள்ளன. இதில் 34 மீனவர்கள் இறந்துவிட்டனர். 127 மீனவர்கள் காயமுற்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம், இழப்பீடு வகையில் இந்த அரசு ரூ.40.37 இலட்சம் அனுமதித்துள்ளது. மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முழுப் பொறுப்பும் இந்த அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசு மூலமாக ஸ்ரீலங்கா அரசிடமிருந்து இந்த அரசு கோரியுள்ளது. இது ஒரு தேசியப் பிரச்சினையாதலால், இப்பிரச்சினையில் மத்திய அரசு முனைப்பாகத் தலையிட வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் உள்ள சுமையை ஏற்க வேண்டுமென்றும் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

7. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்யும் திட்டத்திற்கு






அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு வழங்க வகை செய்ததன் மூலம், இம் மாநிலத்தில் சமூக நீதி மேம்பாட்டுக்காக இவ்வரசு மேற்கொண்ட தன்னிகரற்ற முயற்சிகளுக்காக 1994 ஆம் ஆண்டு நினைவில் நிற்கும். இந்த அவை, மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு மொத்தம் 69 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம் ஒன்றை, 1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று இயற்றியுள்ளதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நினைவுகூரலாம். இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காக இச்சட்ட முன்வடிவு, 1994 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19 ஆம் நாளன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அனைத்துக் கட்சித் தூதுக்குழு ஒன்றின் தலைமையேற்று 1994 ஆம்ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று புது டில்லிக்குச் சென்று மாண்புமிகு பிரதமரிடம் தமிழ்நாடு இட ஒதுக்கீடு தொடர்பான சட்ட முன்வடிவிற்குக் குடியரசுத் தலைவர் விரைவில் இசைவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி முறையீடு ஒன்றினை அளித்தார். இந்தியக் குடியரசுத் தலைவர் அச் சட்டமுன்வடிவுக்கு, 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19ஆம் நாள் இசைவளித்தார். அச் சட்டமுன்வடிவு சட்டமாக்கப்பட்டது. ஆக்கபூர்வமாகச் செயற்பட்டுப் பரந்த அளவில் விளைவை ஏற்படுத்தும் வகையில் அமைந்த இட ஒதுக்கீட்டுச் சட்ட நடவடிக்கைக்கு நிரந்தரத்தன்மை அளிக்கும் பொருட்டு, இச்சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பை வழங்க இவ்வரசு முயற்சி மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட தளராத முயற்சிகளினால், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு 45 ஆம் சட்டம், நாடாளுமன்றம் இயற்றிய 1994 ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்தாறாவது திருத்தம்) சட்டத்தின் மூலம், அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டு வருகிறது என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அரசமைப்புத் திருத்தச் சட்டமுன்வடிவிற்கு, இந்தியக் குடியரசுத் தலைவர் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31 ஆம் நாள் இசைவளித்தார். வரலாற்றுப் புகழ்பெற்ற இச் சாதனை, ஆக்கபூர்வமாகச் செயற்படவும் அதன் மூலம் சமுதாய மக்கள் தம்மிடையே பகைமை உணர்ச்சியும், காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் செயற்படவும் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடையவும் வழி வகுத்துள்ளது. பூசல்களும் தொல்லைகளும் பெருக இடமளிக்கக் கூடிய இப்பிரச்சனைக்கு இத்தகைய சிறப்பாக எண்ணிச் செய்த இணக்கமான தீர்வு கண்டுள்ளது உண்மையிலேயே பெருமை கொள்ளத்தக்க சாதனையாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்குச் சமூக நீதி வழங்குவதில் தமிழ்நாடு உண்மையிலேயே சிறந்த வழிகாட்டியாக முன்னேறிச் சென்றுள்ளது.

8. சமுதாயத்தில் உள்ள பல்வேறு வகுப்பினர்க்கும் இடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு "மதச் சார்பின்மை"க் கொள்கை நேர் பயன் தரும் கோட்பாடாகும் என்றறிந்து அதனையே இவ்வரசு எப்போதும் பின்பற்றி வந்துள்ளது. இந்த அரசு பதவியேற்றபோது சில கோவில்களில்தான் அன்றாடம் ஒரு கால பூஜையாவது நடத்தி வர முடிந்தது. மிகச் சிறிய கோவில்களாக இருந்தாலும் சரி, அவற்றிற்கென்று போதுமான அறக்கட்டளைகள் இல்லாத கோயில்களாக இருந்தாலும் சரி எல்லாக் கோவில்களுக்கும் அன்றாடம் பூஜை உறுதியாக நடைபெறச் செய்வதற்குரிய ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு தொடங்கிவைத்தது. இது வரை 5500 கோவில்களுக்கு மேல் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் அனைத்துக் கோவில்களும் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் பணிகளுக்காக இவ்வரசு இதற்கு முன்னர் வழங்கப்பட்டிராத சாதனையளவாக ரூ.1 கோடி மானியம் வழங்கியுள்ளது. உலேமாக்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், உலேமா உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.250/- என்பதிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.400/- என்னும் அளவிற்கு 1994, டிசம்பர் திங்கள் முதல் உயர்த்தப்பட்டது. இதன்கீழ் 1700 உலேமாக்கள் பயன்பெறுவார்கள். இதற்காக ஆண்டுக்கு ரூ.30.60 இலட்சம் கூடுதல் செலவு பிடிக்கும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், கிறித்தவர் உட்பட சிறுபான்மையினருக்குக் கடன்கள் வழங்கக் கூடிய வகையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தொட்டில் குழந்தைகள் திட்டத்திற்கு ஆசிகள் வழங்கிய அன்னை தெரசா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சென்னையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிஷினரீஸ் ஆப் சாரிடி நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். மிஷினரீஸ் ஆப் சாரிடி நிறுவனம் ஆற்றுகின்ற உயர்ந்த அறப்பணிகளுக்கு ஆதரவு தருகின்ற வகையில், அதற்குச் சொத்து வரி, தண்ணீர் வரி, தண்ணீர்க் கட்டணம், மோட்டார் வண்டி வரி, நுழைவு வரி ஆகிய வரிகளனைத்தும் செலுத்த வேண்டியதில்லை என்று அவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

9. தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உறுதி செய்ய, இவ்வரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து 1101 அறிஞர்களும் மாநிலத்தின் மூலை முடுக்குகளிருந்து இலட்சக் கணக்கான தமிழர்களும் வந்து கலந்து கொண்ட இம்மாநாடு உண்மையிலேயே தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் தொன்மைச் சிறப்பையும், உயர் தனிச்செம்மை நிலையையும் புலப்படுத்துகின்ற பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகத் திகழ்ந்தது. பண்டைத் தமிழ்ப்



பண்பாட்டின் உறைவிடமாகத் திகழும் தஞ்சை நகரம் தமிழ்மொழி, பண்பாட்டு மணி மகுடத்தில் பதித்த இரத்தினமாக ஒளி வீசித் திகழ்ந்தது. சாலைகள், சாலைப் பாலங்கள், பேருந்து நிலையம், வீட்டு வசதி, குடிநீர் வழங்கல், நகர்ப்பகுதி அடிப்படை வசதிகள் ஆகியவற்றில் ஆழ்ந்து சிந்தித்துச் செய்யப்பட்ட முதலீடுகள், தஞ்சாவூரை நவீன நகரமாக மாற்றி, இந்நாள் தமிழ் மக்களின் பேரார்வத்தையும், எழுச்சியையும் முழுவதுமாகப் பிரதிபலிக்கச் செய்திட உதவியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டில் பேசுகின்றபோது, தமிழில் தொன்று தொட்டு இருந்துவரும் இயல், இசை, நாடகம் என்கிற முத்தமிழ்ப் பகுப்புடன், நான்காவதாக 'அறிவியல் தமிழ்' என்னும் பகுப்பினையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், வருங்கால வளமை, அறிவியல் தமிழ் வளர்ச்சியில்தான் உள்ளது என்றும் வலியுறுத்தினார். தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றை மேம்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சிறப்பாக வகுத்திட்ட ஒன்பது அம்சச் செயல் திட்டம் ஒன்றை அறிவித்தார். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இம் மாநாட்டில் அறிவித்த "இன்றும் தமிழ், என்றும் தமிழ்" என்ற முழக்கம், நவீனகாலத் தமிழ் உணர்வில் பொங்கிப் பெருகும் எழுச்சியையும் புதுமைப் பொலிவையும் பிரதி பலிக்கிறது.



10. தமிழ் நாட்டுத் திரைப்படத் தொழில், இந்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாகும். இது ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பை அளிக்கிறது. டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர் 87 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.67 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31.8.94 ஆம் நாளில் திறந்து வைத்தார். இத்திரைப்பட நகரில் பன்னாட்டுத் தரத்தில் அமைந்த திரைப்படத் தயாரிப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன. இங்கு, சிர்வளி வசதி பெற்ற திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள், நவீன தொழில் நுட்பத் திறனுடைய திரைப்படக் கருவிகள், மீள் ஒலிப்பதிவு அரங்கு, கவர்ச்சிகரமாக அமைந்த நிரந்தர அரங்கமைப்புகள், வெளிப்புறப் படப்பிடிப்பு இடங்கள் ஆகியன அமைந்துள்ளன. இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுடைய நீண்டகாலத் தேவை, இத்திரைப்பட நகரை நிறுவியதன் மூலம் நிறைவு செய்யப்பட்டது. இது இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று போற்றப்படுகிறது. இது, நாட்டிலேயே சென்னையை திரைப்படத் தயாரிப்பு முன்னோடி நகராக அழைக்க வழி வகுத்துள்ளது.

11. 1994-95 ஆம் ஆண்டில் சாதனையளவாக ரூ.2750 கோடி திட்ட ஒதுக்கீட்டினைப் பெறுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட சிறப்பு முயற்சிகளைப் பேரவை உறுப்பினர்கள் யாவரும் நன்கு அறிவர். ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டு இலக்கை எய்திட இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், நமது நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி

அளவைக் காட்டிலும் உயர்வாக இருக்கும். சென்ற மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சியதன் மூலம், பொறாமைப் படத்தக்க சாதனையைத் தமிழ்நாடு புரிந்துள்ளது. பல மாநிலங்கள் தங்களுடைய ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை எய்த முடியாமல் இருந்த நிலையில், நமது மாநிலம் இச்சாதனையை எய்த முடிந்துள்ளது. இவ்வாறாகத் தமிழ்நாடு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்கான ஒதுக்கீடுகளை உண்மையில் பாதுகாத்தும், அதே சமயம், தன் நிதி நிலைமையையும் நன்னிலையில் பேணிக்காத்தும் 1991-92 இலிருந்து ஒவ்வோராண்டும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சுகின்ற சாதனையைத் தொடர்ந்து படைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.1.1995 அன்று மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவரை சந்தித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அளித்த வாக்குறுதியைத் திறம்பட நிறைவேற்றிச் சாதனை படைத்துள்ளமைக்காகத் திட்டக்குழுத் துணைத் தலைவர் அவரைப் பெரிதும் பாராட்டியுள்ளார். மாநிலம், கடந்த காலத்தில் ஆற்றிய சாதனை காரணமாகவே, 1995-96க்கான மாநிலத் திட்ட ஒதுக்கீட்டினை ரூ.3200 கோடி என நிர்ணயிக்க முடிந்தது. இந்த ஏற்பளிப்பைப் பெற்றதன் மூலம், எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.10,200 கோடி, குறித்த தொகையளவால் மட்டுமின்றி, பணவீக்கத்தை உள்ளடக்கி வரும் உண்மையான தொகையளவாலும் எய்தப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம். கூர்த்த மதியுடன் நிதி நிருவாகம் செய்வதற்கு இடையீடின்றி வலியுறுத்திவந்த காரணத்தாலும், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பணியைத் தொடர்ந்து கண்காணித்து வந்ததாலும் இவ்வியத்தகு சாதனையை எய்த முடிந்துள்ளது.






12. மாநிலம் 1994 நவம்பர், டிசம்பரில் பெய்த பெரும் மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட போதிலும், உணவு உற்பத்தியில் புதிய சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென்ற குறிக்கோளை உழவர்கள் சிறப்பான முறையில் செயற்படுத்தியுள்ளனர். தரமான வேளாண்மை இடுபொருள் வழங்கவும், உரிய காலத்தில் பாசன வசதியளிக்கவும், மண்வள, விதைத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தவும், உரிய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயல்திட்டமும், இவற்றுடன் சிறப்பான முறையில் அமைந்த விரிவாக்கப் பணிகளும் நடைமுறைப் படுத்தப்பட்டன. நமது மாநில விவசாயிகள் 100 இலட்சம் டன் என்ற உணவு தானிய உற்பத்தி இலக்கையும் விஞ்சிட முனைந்துள்ளதன் மூலம் அவர்கள் நம்முடைய பெரும் பாராட்டுக்கு உரியவர்களாகிறார்கள். அரிசி உற்பத்தி 85 இலட்சம் டன் என்ற அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு உற்பத்தி முன் எப்போதுமில்லாத அளவிற்கு 265 இலட்சம் டன் என்ற அளவை எட்டும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 14.75 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென்றும், பயறுவகை உற்பத்தி 4 இலட்சம் டன்னாக இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தி 6.60 இலட்சம் பேலாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு அதிக அளவு பயனளிக்கும் வகையிலமைந்த வேளாண்மை விலைக் கொள்கைகளும், கொள்முதல் கொள்கைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து வகை நெல்லுக்கும்

உரிய கொள்முதல் விலைகள் 1-9-1994 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.30 அளவுக்கு உயர்த்தப்பட்டன. கரும்புக்கான மாநில அரசின் விலை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு டன் ஒன்றுக்கு ரூ.525 ஆக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. மிகுந்த நிதி இடர்ப்பாடு இருந்து வந்த சூழ்நிலையிலும் கூட, இவ்வரசு உழவர் பெருமக்கள் பெரும்பயன் அடையும் வகையில் அவர்களுக்குத் தொடர்ந்து எவ்விதத் தடுமாற்றமுமின்றி இலவச மின்சாரத்தை வழங்கி வந்துள்ளது. விவசாயத் துறையில் எல்லா நிலையிலும் வளம் கொழித்தது என்பது மிகவும் மனநிறைவளிக்கிறது. இத்துறை நம்மைப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் முன்னோடி ஆற்றலாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. இவ்வரசு, வரும் ஆண்டில், விவசாயத் துறையில் உயரிய வளர்ச்சி எய்தும் பொருட்டுப் போதுமான ஆதரவுப் பணிகளுடன் செயற்படுத்தப்படுகின்ற, பயன்பாட்டு நோக்கில் அமைந்த இக்கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளும். தமிழ்நாட்டில் விவசாயத் துறையின் வளமைக்குக் காவிரி ஆற்றில் போதுமான அளவு தண்ணீர் வருவது முக்கியமானதாகும். காவிரி நதி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் இடம்பெற்றுள்ள விதித் துறைகளை கருநாடக அரசு வரும் பருவத்தில் செயல்படுத்தும் என்று நாம் நம்புகிறோம். மேலும், வருகின்ற பருவத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற உறுதி செய்யுமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

13. தொழில் உற்பத்திக் குறியீடு. தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி 1994-95ல் மீண்டும் வலுவாகப் புத்துயிர் பெற்றுள்ளதைக் காட்டியுள்ளது. 1994 செப்டம்பர் இறுதியுடன்




முடிவடைந்த அரையாண்டில், அது 5.1 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது. 1993-94 ஆம் ஆண்டுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வெளியிட்ட "தொழில் வளர்ச்சிக்கு வங்கியின் பணிகள் குறித்த அறிக்கை", புதிய தொழில்களுக்குக் கடன் அனுமதித்தல், வழங்குதலைப் பொறுத்தவரை, இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும், அந்த ஆண்டில், கடன் உதவிகள் வழங்குவதில் இந்தியாவின் 18 மாநிலங்களைச் சேர்ந்த அரசு நிதியுதவிக் கழகங்களில் 12 மாநிலங்களின் நிதியுதவிக் கழகங்கள் பின்னடைவு நிலையில் இருந்த சமயத்தில், அனைத்து மாநிலங்களிலும் மிக உயர்ந்த அளவாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கிய கடன் அனுமதிகள் 54.8 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கை காட்டுகிறது. இச்சாதனையின் மூலம், 'டிக்' நிறுவனம் தொழிற்கடன் அனுமதியில் அனைத்திந்திய அளவில் 4-ஆம் இடத்திலிருந்து 2-ஆம் இடத்திற்கு உயர்ந்துள்ளது. பொருளாதாரக் கொள்கையைத் தாராளமாக்கியதைத் தொடர்ந்து எழுந்துள்ள கடும்போட்டிகள் நிலவும் சூழ்நிலைகளில், மாநில அளவிலான சீர்திருத்தங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்

தமிழ்நாடு மாநிலத்திற்குக் குறிப்பான செயல் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார். இச்செயல் திட்டத்தில், சிறப்பான, தரமான அடிப்படை வசதிகள் செய்துதருதல், தொழில்கள் தொடங்குவதற்கு விரைந்து அனுமதிகள் வழங்குவதற்கான நிருவாக அமைப்பை உருவாக்குதல், நிலம், நீர், மின்சக்தி ஆகியவற்றை எளிதில் கிடைக்கச் செய்தல், பிற மாநிலங்களுடன் ஒப்பிட, நமது மாநிலம் எந்தெந்தத் தொழில் தொகுதிகளை நிறுவுவதற்குரிய அனுகூலங்களைப் பெற்றுள்ளதோ, அத்தகைய குறிப்பிட்ட தொழில் தொகுதிகளை இங்கு நிறுவி வளர்த்தல், தொழில் வளர்ச்சிக்கு உகந்த தொழில் நல்லுறவுச் சூழலை வளர்த்தல், தொழில் நுட்ப மனிதவளத்தை மேம்படுத்தல், நிலையான நிதிக் கொள்கை, நகர்ப்பகுதி அடிப்படை வசதியையும் வீட்டு வசதியையும் உருவாக்குதல் ஆகியவை அடங்கும். தற்போது உருவாகி வரும் தொழில்துறைப் போட்டிகள் நிலவும் சூழ்நிலையில், மாநிலத்தின் நிலையை உயர்த்துவதற்கு மாநில அரசு பல்வேறு தொழில் குழுக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது.

14. புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதை விரைவுபடுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளும் வழங்கும் வகையில், உயர் நிலைக் குழு ஒன்று 1995 ஜனவரியில் ஏற்படுத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இக்குழு ரூ.50 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படும் புதிய பெருந்திட்டங்களுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்கும். சிறு தொழில்கள், மிகச் சிறிய தொழில்களுக்கான அனுமதிகளை விரைந்து அளிக்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




15. நாட்டின் "மோட்டார் தொழில் தலைநகர்" என்ற பெருமையை சென்னைக்கு மீண்டும் பெற்றுத்தர இந்த அரசு விழைகிறது. இத்துறையில் புதிய முதலீடுகளைத் திரட்டித் தருவதில், இந்த அரசு தன்னாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளும். அண்மையில் புதிய கார் தயாரிப்பு குறித்த திட்டங்கள் சில தொழிலதிபர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் கார் தயாரிப்புத் தொழிற்சாலைகளை நிறுவுமாறு கார் தயாரிப்பாளர்களை இந்த அரசு தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது.

16. மாநிலத்தில் வெளிநாட்டார் நேரடியாக முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், தொழில் நகரமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள சென்னை தொழில் பூங்கா, சென்னைக்கருகே சோளிங்கநல்லூரில் 1500 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்படும். இத்திட்டத்திற்கு திருவாளர்கள் "ஸ்பிக்" நிறுவனமும், பாலாஜி குரூப் நிறுவனமும் உள்ளூர் உடனுழைப்பாளர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு உடனுழைப்பாளர்களின் பட்டியல் தேர்வு




செய்யப்பட்டுள்ளது. அவர்கள் 1995 ஜனவரியில் மனையை நேரில் பார்வையிட்டனர். தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள தொழில்நகரங்களுடன் ஒப்பிட, மிகச் சிறந்த தொழில் பூங்கா எனக் குறிப்பிடத்தக்க அளவுக்கு வசதிகள் அனைத்தையும் கொண்டதாக இதனை நிறுவுவதே நமது நோக்கமாகும். ஊக்குவிப்புப் பணியில் அரசு ஆற்றவிருக்கும் பங்கின் ஒரு பகுதியாக ரூ.20 கோடி செலவில் 211 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்று புதிதாகக் கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாற்றில் 600 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் ரூ.17.80 கோடி செலவில் புதிய தொழில் பேட்டை ஒன்றை நிறுவும் பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கைகொண்டானிலும், புதிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு வாக்களித்திருந்த நிதியுதவி முழுமையாகப் பெறப்படாத நிலையிலும், தமிழ்நாடு தொழில் அடிப்படைக் கட்டமைப்பு நிறுவனம் (டாசிட்) அவற்றை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டையிலும், தருமபுரி ,மாவட்டத்தில் பருகூரிலும், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஊத்துக்கோட்டையிலும் புதிய தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவ டாசிட் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்தப் பெரிய தொழில் வளாகங்கள், புதிய முதலீடுகளுக்கு முழுமையாக மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை வழங்கும்.

17. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய பெட்ரோலியம்-இயற்கை எரிவாயு இணை அமைச்சரான திரு சதிஷ் சர்மாவுடன் சென்னையில் 8.2.1995 அன்று நடத்திய பேச்சுவார்த்தையில் தென் மாநில எரிவாயு இணைப்பு மையம் ஏற்படுத்துவது பற்றி விவாதித்தார். தென் மாநில எரிவாயு இணைப்பு மையத்தை ஏற்படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாக மத்திய இணை அமைச்சர் உறுதி அளித்தார்.

18. எரிசக்தித் துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழ் நாட்டில் 1992 அக்டோபர் முதல் மின்வெட்டு அறவே இல்லை. இம்மகிழ்ச்சிகரமான நிலை மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்கத் தொழிலதிபர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த மகிழ்ச்சி ததும்பும் நிலை வருங்காலத்திலும் தொடர வேண்டும் என்பதற்காக இவ்வரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. வடசென்னை அனல் மின் திட்டத்தின் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட முதல் பிரிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.2.95 அன்று தொடங்கி வைக்கப்பட்டது என்பதை இப்பேரவையின் உறுப்பினர்கள் அறிவர். இது ஒரு குறிப்பிடத்தக்க அருஞ்சாதனையாகும். இந்த அனல் மின் திட்டத்தின் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது, மூன்றாவது பிரிவுகள், முறையே 1995 மே மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் தொடங்கி

வைக்கப்படும் என்பது இதனைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொன்றும் 30 மெகாவாட் வீதம் மொத்தம் 120 மெகாவாட் உற்பத்தித் திறன் உடைய, 4 பிரிவுகள் அடங்கிய, எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பேசின்பாலம் அனல் மின் திட்டம் 1995-96இல் முழுமையாகச் செயற்பட்டு மின் உற்பத்தி தொடங்கும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணி 1992-93இல் தொடங்கப்பட்டு இவ்வளவு விரைவில் முழுமை பெற இருப்பது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். தொடர்ந்து மின் சக்திப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க, மின் சக்தி மேம்பாடு குறித்த நீண்ட காலத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்பதை இவ்வரசு அறியும். இந்த நோக்கத்துடன் தனியார் துறையில் சில புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. திருவாளர்கள் எஸ்.டி.-சி.எம்.எஸ். (ST-CMS) நிறுவனத்தால் ஏற்படுத்தப்படவுள்ள, பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுள்ள திட்டத்திற்குத் தேவையான எதிர் உத்தரவாதத்தை மத்திய அரசு விரைவில் அளிக்குமானால், திட்டத்தை உடனடியாகத் தொடங்க இயலும். கூட்டுத் துறையில், ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்க-மின் உற்பத்தித் திட்டத்தின் நிதி வளவாய்ப்பு குறித்து



விரைவில் விரிவாக இறுதி மதிப்பீடு செய்யப்படும். கடலூரில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1320 மெகாவாட் திறனுள்ள அனல்மின் உற்பத்தி நிலையத்தையும், வடசென்னையில், நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1000 மெகாவாட் திறனுள்ள (நிலை-II) அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் மற்றும் 500 மெகாவாட் திறனுள்ள (நிலை-III) அனல்மின் உற்பத்தி நிலையத்தையும், தூத்துக்குடியில், நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 500 மெகாவாட் திறனுள்ள அனல்மின் உற்பத்தி நிலையத்தையும், ஸ்ரீமுஷ்ணத்தில் 250 மெகாவாட் பழுப்பு நிலக்கரி அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் ஏற்படுத்த உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த அனல்மின் உற்பத்தி நிலையங்கள் மொத்தம் 16,065 கோடி ரூபாய் முதலீட்டை உள்ளடக்கியவையாகும். கும்மிடிப்பூண்டியில் 1000 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும், தூத்துக்குடிக்கு அருகில் வேம்பாரில் 2000 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும் பிள்ளைப்பெருமாள்நல்லூரில் 300 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும் ஏற்படுத்தவும் உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட இந்த மின் உற்பத்தி நிலையங்களில் செய்யப்படவுள்ள முதலீடு ரூ.12,540 கோடியாக இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மொத்தம் 29,925 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில், மொத்தம் 7,120 மெகாவாட் திறனுள்ள புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவை தவிர, பேசின்பாலத்தில் 200 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும்,

சமயநல்லூரில் 100 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும், சாமளப்பட்டியில் 100 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும் அமைப்பதற்கான உடன்படிக்கைகளும் கையெழுத்தாகியுள்ளன.

19. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இவ்வரசு பெரிதும் வலியுறுத்தியுள்ளது. 100 மெகாவாட் இறுதி நிலைத் திறன் கொண்ட கடல்நீர் வெப்ப ஆற்றல் மின் உற்பத்தி நிலையத்தை மேம்படுத்தவும் உடன்படிக்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காற்றுச் சக்தியைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் காற்றாலைகளை நிறுவும் முற்போக்குக் கொள்கையை ஏற்கெனவே செயல்படுத்தி 132 மெ.வா. திறனுள்ள காற்றாலைகளை நிறுவியுள்ளது. இத்துறையில் தமிழ்நாடு ஆற்றிய சாதனையின் விளைவாக, காற்றாலைச் சக்தி மேம்பாட்டுக்கான தேசிய விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எரிசக்தித் துறையில் மத்திய அரசு புதிதாக முதலீடுகள் எதனையும் செய்யவில்லை என்பது கவலையளிக்கத் தக்கதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையை, மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவரிடம் தெரிவித்து, 2000 மெகாவாட் கூடங்குளம் அணுமின் திட்டம், நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் திட்டம் ஆகியவை குறித்து விரைவில் முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கான மூலதன நிதியில் முதலீடு செய்வதற்கான விருப்பத்தை தமிழ்நாடு அரசு ஏற்கெனவே தெரிவித்துள்ளது. இந்த இரண்டு முக்கியமான திட்டங்களைத் தொடங்குவது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்க வேண்டியது அவசியமாகும்.



20. எரிசக்தித்துறையைத் தவிர, விரைவான வளர்ச்சிக்காக ஏனைய முக்கிய அடிப்படை வசதித் துறைகளும் கண்டறியப்பட்டுள்ளன. எண்ணூரில், துணைத் துறைமுகம் உருவாக்கும் பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துவோம். இதற்கான விரிவான வளவாய்ப்பு அறிக்கை தயாரிக்கும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தி, அதனை ஆழமான, பல்விதச் சரக்குத் துறைமுகமாக மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். ரூ.600 கோடி செலவிலான கடலூர் துறைமுக மேம்பாட்டுப் பணிகள், கடலூர் அனல்மின் திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்தும் பணியை, இந்த அரசு, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்துடன் சேர்ந்து நிறைவேற்றும். சாலைகள் துறையில், ரூ.950 கோடி ஒதுக்கீட்டிலான மாநிலச் சாலைகள் குறித்த பெருந்திட்டத்திற்கு உலக வங்கி ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படக் கூடிய சாலைகளைக் கண்டறிந்து உதவ ஆலோசகர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்துடன் விரைவுப்

பேருந்துச் சாலைகள், முக்கியமான புறநகர்ச் சாலைகள் மேம்பாட்டிற்காக இந்த அரசு தனியார் துறையினருடன் விவாதங்கள் நடத்தியுள்ளது.

21. தமிழ்நாட்டில் தொழில் உறவு நிலை 1994ல் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பட்டிருந்தது. 1994ல் மொத்த மனித உழைப்பு நாட்கள் இழப்பு கணிசமான அளவில் 39.2 சதவீதம் குறைந்துள்ளது. அதே நேரத்தில், இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்த, இந்த அரசு, புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டம் ரூ.76 கோடி செலவிலும் தொழில் பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான வாழ்க்கைத் தொழில் கல்விப் பயிற்சித் திட்ட ரூ.21.74 கோடி செலவிலும், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் துறையுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருவதற்கு உறுதி செய்வதன் மூலம், நவீன தொழில் நுட்ப உத்திகள் தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சிப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்படும்.

22. சென்னை மாநகரத்திற்கு நீண்ட காலமாக இருந்து வரும் கடுமையானகுடிநீர்ப் பற்றாக்குறையை மாண்புமிகு





உறுப்பினர்கள் அறிவர். இது, கடந்த காலங்களில் முறையாக முதலீடு செய்யாததன் விளைவேயாகும். மாநகரின் குடிநீர் வழங்கல் பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையில் தீர்வு காண்பதில், இவ்வரசு, உயர் முன்னுரிமை அளித்துள்ளது. கிருஷ்ணா நதி நீரை, சென்னை மாநகருக்குக் கொண்டு வரும் தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் நாள் ஐதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் விவாதித்தார். 1995 டிசம்பருக்குள் குறைந்த அளவு 300 கோடி கன அடி (3 டிஎம்சி) தண்ணீராவது சென்னை மாநகருக்குக் கிடைக்கும் என்று ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதலமைச்சர் உறுதியளித்தார். இறுதியில், இத்திட்டத்திற்காக எடுத்த முயற்சிகளின் பயனை அடையவிருக்கின்றோம் என்று தெரியவந்துள்ள நிலை உண்மையிலேயே, மிகுந்த மன நிறைவை ஏற்படுத்துகிறது. 1995 டிசம்பருக்குள் எதிர்பார்க்கின்ற கூடுதல் நீரைச் சுத்திகரித்து விநியோகம் செய்யும் பணிக்கு அதிக அளவு முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. நமக்கு 300 கோடி கன அடி நீர் கிடைக்கப் பெறும்போது அதனைச் சுத்திகரிப்பு செய்து விநியோகிக்கும் பணியை 1995 டிசம்பருக்குள் முடிக்கும் வகையில் ரூபாய் 177 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முடிவாக எதிர்பார்க்கின்ற 1200 கோடி கன அடி கிருஷ்ணா நதி நீரைப் பயன்படுத்த, மொத்தம் ரூபாய் 1231 கோடி முதலீட்டுடனான மூன்றாவது சென்னைக் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு உலக வங்கியை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. வடகிழக்கு பருவ மழை பொய்த்துவிடும் நிலையில் ஏற்படும்

தொல்லையிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் நிலைக்குக் காப்பளித்து சிரமைக்கும். நீண்டகால முயற்சியின் ஒரு பகுதியாக, புதிய வீராணம் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியுதவியை இவ்வரசு ஏற்கெனவே கோரியுள்ளது. உலக வங்கி, இத் திட்டத்தை, முடிவாக 1995 பிப்ரவரித் திங்களில் மதிப்பீடு செய்துள்ளது. மொத்தம் ரூ.1638 கோடி செலவிலான இத்திட்டம், கூடுதல் நீரை இரும்புக் குழாய்களில் எடுத்து வர வகை செய்வதுடன், வீராணம் ஏரியை முழுவதுமாக மேம்படுத்தவும், சென்னை மாநகர் குடிநீர் விநியோகத் திட்டத்தைச் சிரமைக்கவும் வகைசெய்யும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியதன் பேரில், இத்திட்டத்தில் ஒரு புதிய முக்கிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, இத்திட்டம் வழியிலுள்ள கிராமங்களுக்கு மாற்று நீர் வழங்கல் ஏற்பாடு அளிப்பதற்காக, இதற்குப் போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. பயன்படுத்திய நீரை மீண்டும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு, மாநகரின் கழிவுநீரைச் சுத்திகரிக்க ரூ.572 கோடி செலவு பிடிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ள, ரூ.509 கோடி உதவி கோரி, அண்மையில் ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. கழிவுநீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவது இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். சென்னை மாநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் பிரச்சினையைச் சமாளிக்க வகுக்கப்பட்டுள்ள இந்த விரிவான முதலீட்டுத் திட்டம் குறித்து அறிந்துகொள்வதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

23. மத்திய அரசு செயலுக்குக் கொண்டுவந்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி தேசிய அளவில் நடைபெற்றுவரும் விவாதம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக தாராளமயமாக்குதல், ஒழுங்குமுறை விதிகளை அகற்றுதல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட பேரளவு பொருளாதார நிலைத்தன்மை ஆகியவற்றை வரவேற்கின்ற. அதே சமயத்தில், புதிய கொள்கைகளும், திட்டங்களும் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதிக்கக் கூடாது என்னும் நிலையை, இவ்வரசு உறுதியாக மேற்கொண்டுள்ளது. இந்த உறுதியான நம்பிக்கையுடன்தான், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவ்ர்கள் பொது விநியோக முறையில், உணவு தானியங்களின் விலையை மத்திய அரசு உயர்த்தக் கூடாது என்று பல்வேறு தேசிய வளர்ச்சிக் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளார். பொருளாதார வளர்ச்சி மிக வேகமாக நிகழ வேண்டியது அவசியம் என்னும் அதே சமயம், அந்தப் பொருளாதார வளர்ச்சி, ஏழை, எளியோரின் நலனுக்குப் பாதகமாக இருக்கக் கூடாது. பொது விநியோகத் திட்டத்தில், அரிசி விலையை மேலும் உயர்த்தாதிருக்குமாறு இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்துகிறது. பொதுவிநியோக



முறையின் கீழ் வழங்கப்படும் அரிசி விலை, மத்திய அரசின் வழங்கல் விலையைவிட மிகக் குறைவாக இருக்குமாறு வைத்துவர வேண்டி, ரூ.440 கோடி அளவிற்கு அரிசி உதவித் தொகைச் சுமையை ஏற்கெனவே இந்த அரசு தாங்கி வருகிறது. இச்சூழ்நிலையில், மத்திய அரசு மேற்கொண்டும் அரிசி விலையை உயர்த்துவதானது, இம்மாநில அரசுக்குத் தாங்கொணா நிதிச் சுமையினை ஏற்படுத்தும். பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி விலையை ஏழை, எளிய மக்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் நிர்ணயிப்பது குறித்து தேசியச் சூழலையொட்டிப் பரிசிலனை செய்ய, தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தை விரைவில் கூட்டுமாறும் இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

24. மாநில அரசுகள் குறிப்பாக, சமூக நலன் குறித்த துறைகளில் ஆற்றும் பங்கினை, மத்திய அரசு புரிந்து கொள்வது என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். இந்தியப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையைப் பேணவும் அடிப்படைக் கட்டமைப்புச் சரிக்கட்டல்களைச் செய்யவும் நேரிட்ட சூழலில் பல மாநிலங்கள், பெயரளவிற்குக் கூட, சமூக நலம் சார்ந்த துறைகளுக்குரிய ஒதுக்கீட்டினைப் பாதுகாப்பதில் இடர்ப்பாடுகளை எதிர்ப்பட்டுள்ளன. தமிழ்நாடு, சமூக நலம் சார்ந்த துறைகளுக்குரிய ஒதுக்கீடுகள் உண்மையில் அதிகரிக்குமாறு பார்த்துக்கொண்டு பெருமைப்படுவதற்குரிய சாதனையைப் புரிந்துள்ளது. இவ்வகையில், ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பயன்களின் அளவுகள் முற்றிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனால், பெரும் நிதி இடர்ப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், இவ்வரசு, ஏழை, எளிய மக்களின் நலனைப் பாதுகாக்க, குறுகிய கால அளவிற்கு அதிகக் கடன் சுமையை ஏற்க முன்வந்துள்ளது தெரிந்ததே. இத்தகைய கொள்கை முடிவினைத் எடுத்ததன் மூலம், இவ்வரசு பொருளாதாரச் சரிக்கட்டல் முறைகளிலிருந்து எழக் கூடிய, கொடுமைகளிலிருந்து தமிழ் நாட்டு மக்களைக் காக்க முடிந்துள்ளது என்பது இவ்வரசின் உறுதியான நம்பிக்கை. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாட்டினைச் செய்து கொடுத்துள்ளது குறித்து தமிழ்நாடு அரசு பெருமை கொள்ளலாம். இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில், உணவுக்கு உறுதி, சத்துணவளித்தல், தொடக்கச் சுகாதாரப் பாதுகாப்பு, அனைவர்க்கும் தொடக்கக் கல்வி, ஆதரவற்ற, ஏலாமையுற்ற அனைவர்க்கும் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகள், ஏழை, எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கும் திட்டங்கள், ஏழை, எளியோருக்கு வீட்டு வசதி, உடைகள் வழங்குதல், குடிநீர் வழங்கல் முதலிய அடிப்படை வசதிகள் அளித்தல், நலிந்த பிரிவினர்களாகக் கண்டறியப பட்டவர்களுக்குச் சிறப்பு உதவித் திட்டம் போன்றவை அடங்கும். ஏழை, எளியோருக்கும், வசதி வாய்ப்பற்றோருக்கும் இத்தகைய விரிவான சமூகப் பாதுகாப்பினை அளிப்பதில் ஏற்பட்ட நிதி நிலை இடர்களைக் கண்டு இந்த அரசு சிறிதும் கலங்கவில்லை.



25. இந்த அரசு, "1998ல் அனைவர்க்கும் கல்வி" என்ற இலக்கினை எட்ட முடிவு செய்துள்ளது. தேசிய அளவில் இலக்கினை எய்துவதற்குக் குறிக்கப்பட்டுள்ள காலவரையறையைக் காட்டிலும் இம்மாநிலத்தின் இலக்குக் காலவரையறை மிக முன்னதாக அமைந்துள்ளது. உலக வங்கியின் உதவியுடன் கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ரூ.125.8 கோடி மொத்தச் செலவில் 1994-95ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முக்கியத் திட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம், தென்-ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 14 வயது வரையிலான அனைத்துச் சிறாரையும் சேர்த்துக் கொண்டு, அவர்கள் தொடக்கப் பள்ளியை விட்டு நின்றுவிடாமல் முழுமையாகப் பள்ளிக் கல்வியைப் பெறும் வகையில் தொடர்ந்து பள்ளிகளில் வைத்துக்கொள்ள வகை செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் கல்வி கற்றலில் குறைந்தபட்சத் தகுதியை எய்தும்பொருட்டு கல்வித் தரத்தின்மீது சிறப்பு நாட்டம் செலுத்துவதாகவும் அமையும். கட்டாயக் கல்வியினை அளிப்பதற்குச் சட்டமொன்றினைக் கொண்டுவரவும் இவ்வரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக 1994 ஜூலைத் திங்களில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. இவ்வரசு, புதிய நெறி வகுக்கும் இப்புரட்சிகரமான சட்டத்திற்கு மேலும் காலதாமதம் செய்யாமல் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த விழைகிறது. இம் மாநிலத்தில் தொடக்கக் கல்வி முறையை வலுப்படுத்தக் கூடுதல் ஆசிரியர்கள் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தற்போது காலியாக உள்ள ஆசிரியர் பதவிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்காகத் தேர்வு செய்யும் பணியை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது.

26. சென்னையைப் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படக்கூடிய ஒரு மையமாக உருவாக்குவதற்கான முதல்படியே இங்கு ரூ. 40 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் ஆகும். சென்னை மாநகர், ஏழாவது தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டி விழாவை நடத்தும் பெரும் புகழைப் பெறவுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெற உள்ள இந்த மாபெரும் விளையாட்டுப் போட்டியில், 7 "சார்க்" நாடுகளிலிருந்து 2500 விளையாட்டு வீரர்கள் பங்குபெற உள்ளனர். பல்நோக்கு அகவிளையாட்டு அரங்கம், நீர்விளையாட்டு வளாகம், ஒரு டென்னிஸ் விளையாட்டு அரங்கம், செயற்கைப் புல்தரை ஆக்கி விளையாட்டு அரங்கம் ஆகியவை உள்பட, பன்னாட்டுத் தரத்தில் அமையும் உயர் நவீனப் போட்டி விளையாட்டு அடிப்படை வசதிகள் ரூ.45.56 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. ரூ.70 கோடி செலவில், ஒரு நவீன விளையாட்டுக் கிராமம் அமைக்கப்பட்டு வருகிறது. போட்டி விளையாட்டுகளுக்கும், உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிப்பதற்கு, இந்தஅரசு உயரிய முன்னுரிமை அளிக்கும். போட்டி விளையாட்டுகள் குறித்த விரிவான ஒரு கொள்கையை இந்த அரசு விரைவில் அறிவிக்கும்.

27. ஆறு மாதம் முதல் 5 வயது வரையுள்ள சிறார்கள் அனைவருக்கும் முழு அளவில் துணைச் சத்துணவு

அளிப்பதில், தமிழ்நாடு, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் உலக வங்கி ஆதரவுடன் கூடிய தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டமும், ஒருங்கிணைந்த சிறார் மேம்பாட்டுப் பணித் திட்டமும் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் இத்திட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருவது இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சிறாருக்கும் வளர்ச்சி கண்காணிக்கப்படுவதற்கும் துணைச் சத்துணவு கிடைப்பதற்கும் உறுதி செய்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். இதற்காக நாம் பெருமை கொள்ளலாம். மகளிர் மேம்பாடு குறித்த கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்தச் சிறப்பாகச் சிந்தித்து வகுத்த கொள்கை, மகளிருக்கு உரிமை அளிக்க வகைசெய்வதுடன், அவர்கள் அனைத்து நிலையிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதை நோக்கமாக கொண்டுள்ளது. வாழ்க்கைத் தொழிலில் சுயவேலை வாய்ப்பு வழங்கப்படுவதற்கு ஓர் இலட்சம் மகளிர் பயனடைய வேண்டுமென இலக்கு வகுக்கப்பட்டிருந்த போதிலும், 1.50 இலட்சம் மகளிருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கான அரசுக் கொள்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 டிசம்பரில் வகுத்துள்ளார். இத்தகைய கொள்கையை வகுத்து முன்வைப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது. இந்தக் கொள்கைத் திட்டமானது, உடல் ஊனமுற்றோருக்குக் கனிவுடன் ஆதரவு நல்கும் முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. இதனை இப்போது ஏனைய மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன.

*28. கி.பி.2000 ஆண்டில் "அனைவருக்கும் நல்வாழ்வு"*





என்ற குறிக்கோளை எய்தும் வகையில் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது. பிறப்பு விகிதத்தைப் பொறுத்தமட்டில், கி.பி.2010 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய தேசியக் குறிக்கோள், ஆயிரத்திற்கு 21 ஆகும். தமிழ்நாடு, 1993ஆம் ஆண்டிலேயே, அதாவது, தேசியக் குறிக்கோள் ஆண்டிற்கு 17 ஆண்டுகளுக்கு முன்னரே, பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு 19.2 என்ற அளவிற்குக் கொண்டுவந்து மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளது. இதே போல, இறப்பு விகிதம் கி.பி.2010 ஆம் ஆண்டில் எய்த வேண்டிய தேசியக் குறிக்கோள் அளவு ஆயிரத்திற்கு 9 என்றிருக்க, தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டிலேயே, இறப்பு விகித அளவை ஆயிரத்திற்கு 8 என்று குறைத்துள்ளது. குழந்தை இறப்பு விகிதமும், உயிருடன் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் 56 என்னும் அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனைத்திந்திய சராசரி அளவு உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 74 ஆகும். சிறார் நலனுக்கான 15 அம்சத் திட்டங்கள் உள்பட, விரிவான புதிய திட்டங்களைக் கொண்டுவந்து, தமிழ்நாடு குடும்பநலன் குறித்துப் பெரும் சாதனை புரிந்துள்ளது என்பதை இந்த அரசு பெருமையுடன் கூறிக் கொள்ளலாம். இந்நெறியில் மேலும் முனைப்புடன் செயல்பட்டு, குழந்தை இறப்பு விகிதத்தை மேலும் பெருமளவிற்குக் குறைக்க இந்த அரசு முயற்சி

மேற்கொள்ளும்.

29. 1994 ல் தொடங்கப்பட்ட "டாக்டர் ஜெ.ஜெயலலிதா பள்ளிச் 'சுகாதாரத் திட்டம்'" பெரும் வெற்றியை அடைந்துள்ளது. 62 இலட்சம் சிறார்கள் மருத்துவ சோதனை செய்யப்பட்டுத் தேவையானவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, 8681 சுகாதாரத் துணை நிலையங்களையும் 1417 தொடக்கச் சுகாதார நிலையங்களையும் கொண்டு இயங்குகின்ற தொடக்க சுகாதாரக் காப்பு ஏற்பாடு குறித்து உண்மையில் பெருமை கொள்ளலாம். தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் உருவாக்கப்பட்டதையடுத்து மருந்துகள் வழங்கும் பணி முழுவதுமாகச் சிர்படுத்தப்பட்டுள்ளது. முறையாகச் சிப்பம் செய்யப்பட்டுப், போதிய அளவிற்கு மருந்துகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நோயாளிகளிடையே நம்பிக்கை அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளில் கருவிகள், சாதனங்களின் இருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த அரசு, சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. பார்வையின்மை குறித்த தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டம் ரூபாய் 64 கோடி செலவில் உலக வங்கியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995 மார்ச் மாதத்திற்கு முன்னர் 2.5 இலட்சம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும். புதிய ஒருங்கிணைந்த கண் காப்புத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதையொட்டி, 1995-96 ஆம் ஆண்டில் 3.5 இலட்சம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இவ்வாறு விரைவுபடுத்தப்படும் வேகத்தில் கடந்த காலத்தில் செய்து முடிக்கப்படாமல் நிலுவையாக இருந்த கண்புரை சிகிச்சைகளும் 3 ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும். 1994 ஆம் ஆண்டு மனித உடல் உள்ளுறுப்புகள் மாற்று அறுவைச்சிகிச்சைச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 42/1994) ஏற்றுக்கொள்ளுவதற்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 252(1) ஆம் பிரிவின் கிழ் திர்மானம் ஒன்றை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இச்சட்டம், மருத்துவ சிகிச்சை நோக்கத்திற்காக மனித உடல் உள்ளுறுப்புகளை அகற்றுதல், சேமித்து வைத்தல், மாற்று அறுவைச் சிகிச்சை செய்தல் ஆகியவற்றை, முறைப்படுத்துவதற்கும், மனித உள்ளுறுப்புகளை வணிக நோக்கில் கையாளுதலைத் தடுப்பதற்கும் வகை செய்கிறது.

30. ஆதி திராவிடர்-பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாடு இந்த அரசு வகுத்துள்ள கொள்கை நிரலில் தலையாய இடம் பெற்றுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு அடிப்படைத் தேவைகளைச் செய்து தருவதற்கான ஒரு திட்டம் செயல்படுவதை, தொடர்புடைய அமைச்சர்கள் அடங்கிய உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு கண்காணித்து வருகிறது. குறித்தகால அளவிற்குள் அதாவது,1996 மார்ச்சுக்கு முன்னர் இத்திட்டம் முடிக்கப் பெறும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில், குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலைகள் அமைத்தல், வீட்டு மனைகள் வழங்குதல், இடுகாடுகள் அமைத்தல், இடுகாடுகளுக்குச் செல்லும்





பாதைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வழங்குதல், "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின் விளக்குகள் அமைத்தல் ஆகியன அடங்கும். ஆதி-திராவிடர்களின் நலனுக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1994 டிசம்பரில் ஒரு புதிய தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார். ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் ஆதரவுத் திட்டத்தை ஏற்கெனவே ,செயற்படுத்தப் பட்டு வரும் ஐந்து மாவட்டங்களுடன் மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு நீட்டித்தல்; ஆண்டு வருமானம் ரூ.50,000 என்னும் வரம்புடன் புதிய சிறப்பு படிப்புதவித் தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தல்; 1000 மாணவியர், 1000 மாணவர் பயன் பெறும் தகுதிப்பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவருதல்; மறைந்த மேயர் சிவராஜ் பெயரில் ரூ.10 இலட்சம் அறக்கட்டளை நிதி ஏற்படுத்தல்; தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவித் தொகையை ரூ.15,000லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்துதல்; மற்றும் தொடக்க உதவித் தொகையை ரூ.85,000 லிருந்து ரூ.1,25,000 ஆக உயர்த்துதல்; கடன் உதவித் தொகையுடன் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு 1000 லாரிகள் வழங்குதல்; 10,000 ஆதி திராவிடர் மகளிருக்குப் பயன் கிட்டும் வகையில் புதிய சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துதல்; 30,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன்கிட்டும் வகையில் வீடுகளை நிலையுயர்த்தும் திட்டத்தைச் செயற்படுத்துதல்; 5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தை செயற்படுத்துதல்; 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல்; 1000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குச் சமுதாயக் கூடங்கள் கட்டுதல் ஆகியவை இந்தச் சிறப்பு திட்டத்தில் அடங்கும். இத்துடன், ஆதி திராவிடர் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பணிபுரியும் ஒருவர்க்கு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பெயரில் ஆண்டு தோறும் ரூ.1 இலட்சம் பரிசு வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்த இத் தொகுப்புத் திட்டங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நலனுக்காக இந்த அரசு பல்வேறு புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், சுய வேலைவாய்ப்பிற்கு ஆதரவு நல்க புதிய கடனுதவிப் பணிகளை மேற்கொண்டுள்ளது. ரூ.13.81 கோடி செலவில் நரிக்குறவர்கள் உட்பட கிராமப்புற ஏழை மக்களுக்காக வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றை இந்த அரசு தொடங்கியுள்ளது.

32. ஏழை மக்களுக்குக் குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, உடை உள்பட அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் மாநிலத்தின் முதன்மைத் திட்டமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டி தருதல் என்ற நோக்கத்தை எய்தும்

வகையில். வீட்டு மனைகள் வழங்கும் பெருந்திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. அண்மையில் எடுத்த ஆய்வின்படி, 1162 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் வசதி இல்லை. இக்குடியிருப்புகளுக்கு 1995 டிசம்பருக்குள் குடிநீர் வழங்க அரசு முயற்சி மேற்கொள்ளும். பொருளாதாரச் சரிக்கட்டல்களுக்கிடையில், ஏழை மக்களுக்கு ஆதரவு அளிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏழை மக்களுக்கு வேட்டி, சேலைகளை இலவசமாக வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். கைத்தறி நெசவாளர்கள் தொழில் செய்து வாழ்க்கை நடத்த உறுதியளித்தல், அதேசமயம் ஏழை, எளிய மக்களுக்கு உடுக்க உடை கிடைக்கச் செய்தல் என்ற இரண்டு நோக்கங்களையும் இத் திட்டம் கொண்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், மொத்தம் ரூபாய் 57 கோடி செலவில், 62.26 இலட்சம் பெண்களுக்கு சேலையும், 61.72 இலட்சம் ஆண்களுக்கு வேட்டியும் வழங்கப்பட்டுள்ளது.

33. தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் சிறப்புத் திட்டத்திற்கு இவ்வரசு எப்போதும் உயர்ந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. கைத்தறி மேம்பாட்டு நிலையங்கள், தரமான சாயம்தோய்க்கும் பிரிவுகள் ஆகியவற்றை ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு நன்கு உதவும் வகையில், கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்தூக்கம் அளிக்க தனியாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் இணைந்த வீடுகள் 2000 கட்டிக் கொடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20.1.1995 அன்று மத்திய துணித் தொழில் அமைச்சரை டில்லியில் சந்தித்த போது, நூலின் விலையைக் குறைக்க மத்திய அரசு முனைப்பாக



நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். முதலமைச்சர் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு மத்திய அரசும் சிட்ட நூலுக்கான உதவித் தொகையை கிலோ ஒன்றுக்கு ரூ.15 லிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.20 ஆக உயர்த்த ஒப்புக்கொண்டது. பதுக்கலைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல், நூற்பு ஆலைகள் குறிப்பிட்ட நூலை மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கோட்பாட்டை பின்பற்றச் செய்தல், பருத்தி மற்றும் குறைந்த தர நூல்களின் ஏற்றுமதியைத் தடைசெய்தல் போன்ற முதலமைச்சர் அவர்களின் கருத்துக்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க மத்திய அமைச்சர் ஒப்புக்கொண்டார். இத் தலையீட்டினைத் தொடர்ந்து, நிலைமை தற்போது கணிசமான அளவிற்கு மேம்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், சென்னையில் ஆடை வடிவமைப்புத் தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தை (National Institute of Fashion Technology) ஏற்படுத்த மத்திய துணித் தொழில் அமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். மீனவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான புதிய முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொண்டுள்ளது. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 4.82 கோடி நிதியொதுக்கத்தில் 1853 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேமிப்பு-

நிவாரணத் திட்டத்தின் கீழ் 1.35 இலட்சம் மீனவர்கள் பயனடைந்துள்ளனர். ரூபாய்15.88 கோடி செலவில் ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைக் காக்க, இவ்வரசு, 1994 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதலாம் நாளிலிருந்து புதிய நலத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. பீடித் தொழிலாளர்கள் 1000 பேர் பயனடையும் வகையில் வீட்டுவசதித் திட்டம் ஒன்றை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. வல்லுநர்குழு அறிக்கையின் அடிப்படையில் இம்மாநிலத்தில் கடலோர மீன் பண்ணைகளை நிறுவுதல், நிருவகித்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்குச் சட்டம் கொண்டுவர அரசு கருதுகிறது.

34. பொதுமக்களின் நியாயமான தேவைகள், குறைபாடுகள் குறித்து மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய, நிருவாகத்தின் பல கட்ட முறையை விடுத்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், நேரடி நடவடிக்கை எடுத்துள்ளார். மிக விரைவாகச் செயல்படவும், தொடர் நடவடிக்கை முறையாக எடுக்கப்படுவதை உறுதி செய்யவும்



முதலமைச்சர் தனிப் பிரிவு முழுவதுமாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. 1992 மார்ச்சிலிருந்து தொடங்கி முதல் கட்டமாக குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட மாவட்டம் என்று, அனைத்து மாவட்டங்களும் அடங்கும் வகையில் திட்டம் வகுத்துக் கொண்டு, அதற்கேற்ப முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து சென்னையில் மனுக்களைப் பெற்றுக் கொண்டு, பெருமளவிலான மக்களுக்கு உதவிகளை அளித்துள்ளார். இரண்டாவது கட்டமாக, 1992 ஜூலையிலிருநது தொடங்கி, மாண்புமிகு முதலமைச்சர், அவர்கள் நேரடியாகவே அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, ஏழை மற்றும் உதவி தேவைப்படக்கூடிய மக்களின் குறைகளை நேரில் கேட்டு, அவர்களுக்கு உதவிகளை அளித்துள்ளார். மாவட்டங்களுக்குச் செல்லும் இந்தத் திட்டம், 1994 செப்டம்பரில் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. மொத்தத்தில்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு 46 முறை நேரில் சென்று வந்துள்ளார். 1994ல் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16 முறை சென்று வந்துள்ளார். இத்திட்டத்தால் 7.74 இலட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர். ரூ.518.76 கோடி மதிப்பிற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1994 இல் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6.59 இலட்சம் பேருக்கு ரூ.397.37 கோடி மதிப்புள்ள உதவிகளை நேரடியாக வழங்கியுள்ளார். மாண்புமிகு முதமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள இந்த நேரடித் தொடர்புத் திட்டமானது, பொதுமக்களின் குறைகளை அரசு உடனடியாகத் தீர்த்து வைக்கவும், வளர்ச்சிப் பணித்திட்டங்களின் பயன்கள் ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களை உண்மையில் சென்றடையவும் உறுதி செய்துள்ளது.

35. நிருவாகப் பணிச் செயற்பாட்டில் உயர்ந்த தரம் பேணி

வரபபடுவதற்கு உறுதி செய்வதற்காக இந்த அரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசின் பல துறைகள், பல பொதுத் துறை நிறுவனங்கள் தேசிய அளவில் விருதுகளைப் பெற்றதன் மூலம் அவற்றின் செயற்பாட்டிற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம், கிரானைட் கற்கள் ஏற்றுமதிக்காகத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக *1993–94* லும் சிறப்பு ஏற்றுமதி விருது வழங்கப் பெற்றுள்ளது. இதைப் போன்றே, அரசு போக்குவரத்து நிறுவனங்களும், உயர்ந்த சாதனை அளவைப் பேணி வந்ததன் மூலம், பல்வேறு பணிச் சாதனைகளுக்காக, தேசிய அளவில் ஆறு விருதுகளைப் பெற்றுள்ளன. வேளாண்மைத் துறை வானவாரி வேளாண்மை மற்றும் நீர்வரத்துப் பகுதி மேம்பாடு ஆகியவற்றில் மிகச் சிறந்த பணி ஆற்றியமைக்காக அத்துறைக்கு மத்திய அரசும் தேசிய உற்பத்தித் திறன் மன்றமும் தகுதிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளன. தமிழ்நாடு மாநில நிலவள வங்கி 1993–94 ஆம் ஆண்டில், அனைத்திந்திய அளவில் கடன் வழங்கும் பணியில் ஆற்றிய மிகச் சிறந்த சாதனைக்காகச் சுழற்கோப்பை விருதைப் பெற்றுள்ளது. காற்றுச் சக்தி ஆற்றல் மேம்பாட்டிற்காகத் தன்னிகரற்ற பணி ஆற்றிய வகையில், சிறப்பான தொடர்பு முகவரமைப்பு என்ற பாராட்டைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் பெற்றுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்தின் தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின்நிலையங்கள், மின்நிலைய உயர் உற்பத்தி மின் சுமைத்திறனை (High Plant Load Factor) எய்திய சாதனைக்காக மீண்டும் மீண்டும் அனைத்திந்திய அளவிலான பரிசுகளைப் பெற்றுள்ளன. நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் இணைந்த வீடுகளை கட்டித்தரும் திட்டத்தின் கீழ்க் குறைந்த செலவில் தறிக்கூடம் இணைந்தவீடுகள் கட்டித்தரும்போட்டியில் கைத்தறி–துணித்



தொழில் இயக்ககமும், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் அனைத்திந்திய அளவில் முதற் பரிசை வென்றுள்ளன. தமிழ்நாடு காவல் துறை நவீன அறிவியல் முறையிலான புலனாய்வுத் துறையில் தனது ஆற்றலை மெய்ப்பித்துள்ளது. 1995 சனவரியில் நடைபெற்ற அனைத்திந்தியக் காவலர் பணிப் போட்டிகளில், புலனாய்வுக்குத் துணை புரியும் அறிவியல் சாதனங்களுக்கான போட்டிப் பிரிவில், ஒட்டு மொத்த முதலிடத்தை வென்றது. மகளிரிடையே சிக்கனத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, மகளிர் சேமிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அனைத்து மாநிலங்களிலும் முதலிடத்தைப் பெற்றது. அரசு செவ்விய முறையில் தேவை உணர்ந்து செயல்படுகின்ற நிருவாகத்தை வழங்குவதற்கு என்றும் போல் தொடர்ந்து பொறுப்பேற்றுச் செயல்படும்.

*36.* தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகள் அறுவடையில் நல்ல விளைச்சல் கண்டுள்ளதாலும், தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாகப் போதிய அடிப்படைப் பணி வசதிகளைப் பெற்றுள்ளதாலும், முன்னெப்போதும் கண்டிராத வகையில் வளம் நிறைந்துள்ளன. தமிழ்நாடு 1994–ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டதை மாண்புமிகு




உறுப்பினர்கள் அறிவர். இச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளவாறு மாநிலத் தேர்தல் ஆணையம் ஒன்றும், மாநில நிதிக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசு 1995 ஜூனில் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த எண்ணுகிறது. தேர்தல் நடத்துதல் குறித்த விரிவான கால அட்டவணையை வகுத்துத் தருமாறு மாநிலத் தேர்தல் ஆணையத்தை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

37. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் இந்த அரசால் 1992 ஜூனில் அறிவிக்கப்பட்டன. உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் முடிவுறாமல் உள்ளன. தேர்தலை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் 1992 ஆகஸ்டில் தடைவிதித்தது. உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட ஆயம் இது சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளைப் பரிசிலிக்க வேண்டியுள்ளது. அரசு தடையாணையை நீக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்த பின்னர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

38. ஒரே சமயத்தில் வளர்ச்சியையும் பெற்றுக் கொண்டு நிலைத் தன்மையையும் பேணி வர முடியும் என்பதைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயற்படுத்திக் காட்டியுள்ளது. சிறந்த முறையில் சட்டம்-ஒழுங்கைப் பேணிக்காத்தது, விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த அடித்தளமாக அமைந்தது. மாநிலத்தில் விரைவான தொழில் வளர்ச்சியினைப் பெற்றுத் தருவதற்கான புதிய செயல் திட்டம் அனைவராலும் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. எந்தச் சூழ்நிலையிலும் ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமை மோசமாகப் பாதிக்கப்படாதவாறு இந்த அரசு எப்போதும் பார்த்துக் கொள்ளும். அதே சமயத்தில், பயனுள்ள புதிய திட்டங்கள் மூலமாக, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயருமாறு செய்ய இவ்வரசு பாடுபடும்.

39. மிகக் கடுமையான சோதனைக்களுக்கிடையேயும், தமிழ்நாட்டை இடையறாத வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும் என்பதைஇவ்வரசு சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டியுள்ளது. ஏறத்தாழ நான்காண்டு கால அளவில் மாநிலத்தில் அமைதியையும், ஒழுங்கையும் பாதுகாக்க முடியும் என்பதை இந்த அரசு உறுதியாக நிலை நிறுத்தியுள்ளது. மேலும், பல்வேறு நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், இவ்வரசு தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு மிகையாக திட்டச் செல்வைச் செய்துள்ளதோடு, நபர் வாரித் திட்ட ஒதுக்கீட்டில், தேசிய சராசரியளவை தமிழ்நாடு விஞ்சுமாறும் செய்துள்ளது. சட்டம்-ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதிலாகட்டும், கடும் நிதி இடர்ப்பாட்டினைச் சமாளிப்பதிலாகட்டும், சமூக ஒருமைப்பாட்டை நிலை நாட்டுவதிலாகட்டும், மாநிலத்தின் உரிமைகளைப் பெற்றுத் தருவதிலாகட்டும் இவ்வாறு

எத்தனை பிரச்சினைகள் எதிர்ப்பட்ட போதிலும், அவை அத்தனையையும் இவ்வரசு வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது. தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பதிலும், சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. தற்போது புதிய திட்டங்களை வகுத்து அவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாட்டின் திறமையை வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்தும் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளன. புதிய முதலீடுகளைச் செய்யவும் வர்த்தக உறவை வலுப்படுத்தவும் பல வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் நமது மாநிலத்திற்கு வருகை தந்துள்ளன.

40. தமிழ்நாட்டை விரைந்த வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இவ்வரசு கற்பனைத் திறனுடனும், துணிவுடனும் எடுத்த பல நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள். தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும், பொருளாதார மேம்பாட்டிற்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து படைத்துள்ள தன்னிகரற்ற சாதனையை நிலைப்படுத்துவதற்கு உறுதி செய்ய, இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அனைவரும் வளர்ச்சியும் வளவாழ்வும் பெற்றுத் திகழ வேண்டும் என்பது இவ்வரசின் தாரக மந்திரமாகும். மேலும், இவ்வரசு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடடைய வேண்டும் என்பதற்கு அசைக்க முடியாத உறுதியுடன் பாடுபடும். இம் மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் பொருளார்ந்த முறையில் அமைந்து எதிர்காலத்தில் இம்மாநிலம் தொடர்ந்து வளம்பெறச் செய்வதற்கு உதவுமென்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை. இம்மாமன்றத்தில் நீங்கள் முன் வைக்கும் விவாதங்கள் ஆக்கப்பூர்வமானதாகவும், சமநிலையுடையதாகவும், பயனுடையதாகவும் அமையும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

**வணக்கம்.**

### தமிழர் தம் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும், ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். பேரறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும். ஆனால், தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

### நாட்டுக்கு நல்லது சொல்லும் சாதனம்

கலைத்துறையின் மூலம் சீரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். முற்போக்கு நாடுகள் எல்லாம் இதில் நம்பிக்கை வைத்திருக்கின்றன. இது ஒரு தொழில் வருமானம் பெறும் சாதனம் என்றில்லாமல் நாட்டுக்கு நற்கருத்துக்களைத் தரும் சிறந்த துறையாகும்.



# "தவறான கருத்துக்களைப் பரப்பாதீர் !"

## தமிழ்நாடு தேர்வாணைக் குழு (TNPSC) தொகுதி-1 (Group-1) பதவிகளுக்கு உச்ச வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட தேவையற்ற புகார் மீதான மாண்புமிகு முதல்வரின் விளக்கக் குறிப்பு



**13.2.1995** தேதியிட்ட நாளிதழ்கள் சிலவற்றில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் — Tamil Nadu Public Service Commission-னால் நடத்தப்படும் Group ஒன்று உயர்பதவிகளுக்குப் போட்டியிடப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் திடீரெனத் தமிழக அரசு வயது வரம்பை நிர்ணயித்து விட்டது போலவும், அதனால் இந்த வகுப்பைச் சேர்ந்த மக்களுக்குப் பாதகம் ஏற்பட்டுவிட்டது போலவும், செய்திகள் வெளியாயின.

தமிழக அரசின் மீது குற்றம் சாட்டுவதற்கு ஏதாவது வாய்ப்புக் கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளும், குறுகிய மனம் படைத்த சில அரசியல் வாதிகளும் இதன் உண்மை நிலை என்ன என்று புரிந்து கொள்ளாமல், சமூக நீதிக்குப் பங்கம் வந்து விட்டது என வாய் கூசாமல் குற்றம் சுமத்தினார்கள்.

தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக நிலவி வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்குத் குந்தகம் ஏற்பட்டபோது, நான் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, சட்டத்தையும் இயற்றி, அதற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முழு பாதுகாப்பினையும் பெறுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

அகில இந்தியா முழுவதிலும் இத்தகைய ஒரு சட்டத்தை இயற்றி அதற்குப் பாதுகாப்பையும் பெற்றுத் தந்த ஒரே முதலமைச்சர் நான் தான். நாடு தழுவிய அளவில் இந்தச் செயல் பாராட்டைப் பெற்றதால், அதை ஜீரணிக்க முடியாத சிலர் மேற்கொண்ட ஒரு பயனற்ற செயல்தான் இத்தகைய வெத்து வேட்டு அறிக்கைகள்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழு தமிழக அரசைச் சார்ந்த பல்வேறு நிலையில் உள்ள, பணியிடங்களுக்குத் தகுதிவாரியாகப் பிரித்து, தேர்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றது. Group-*1* என்று அழைக்கப்படும் *8* வகையான உயர்நிலைப் பதவிகளுக்கும், தகுதியானவர்களைத் தமிழ்நாடு தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்து வருகின்றது. இந்த Group-*1* தொகுப்பைச் சார்ந்த *8* பதவிகளில், துணை ஆட்சியர் - Deputy Collector, கோட்ட தீயணைப்பு அலுவலர் - Divisional Fire Officer, கோட்ட வளர்ச்சி அலுவலர் - Divisional Development Officer, காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் -Deputy Superintendent of Police மற்றும் வணிக வரி அலுவலர் Commercial Tax Officer ஆகிய 5 பதவி

களுக்குப் போட்டியிடும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மனுதாரர்களுக்கு அதிகபட்ச வயது உச்ச வரம்பு 35 என்று, ஏற்கெனவே நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை இந்த உச்ச வரம்பு நடைமுறையில் இருந்து வருகிறது. மீதமுள்ள 3 பதவிகளான, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் - District Employment Officer மாவட்டப் பதிவாளர் - District Registrar கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் - Deputy Registrar of Co-operative Societies ஆகிய 3 பதவிகளுக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மனுதாரர்களுக்கு மட்டும் வயது உச்சவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. இந்த முறை, இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பதவிகளுக்குப் போட்டியிடும் மனுதாரர்களின் பொதுவான வயது வரம்பு 26 என 1975-ஆம் ஆண்டு வரை நிர்ண யிக்கப்பட்டிருந்தது. பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வகுப்பினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்குத் துணை ஆட்சியர் - Deputy Collector, பதவிக்குப் போட்டியிட அதிகப் பட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்யப்படவில்லை. மற்றும் வணிக வரி அலுவலர் - Commercial Tax Officer பதவிக்கு வயது உச்ச வரம்பு 30 ஆகவும், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் - Deputy Superintendent of Police மற்றும் கோட்ட தீயணைப்பு அலுவலர் - Divisional Fire Officer, ஆகிய பதவிகளுக்குக் குறைந்தபட்ச வயது வரம்பு 21 எனவும், அதிகப்பட்ச வயது வரம்பு 31 எனவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் - Deputy Registrar of Co-operative Societies மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் - District Employment Officer ஆகிய பதவிகளுக்கு எந்த உச்ச வயது வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை.

1978-ஆம் ஆண்டு முதல் துணை ஆட்சியர் பதவிக்கு வயது வரம்பு இல்லாமல் இருந்த நிலையை மாற்றி, முதன் முதலாக வயது உச்ச வரம்பு 31-ஆக நிர்ணயிக்கப்பட்டது. அதே போல வணிகவரி அலுவலர் பதவியின் வயது உச்ச வரம்பு 30-க்குப் பதிலாக 31-ஆக மாற்றியமைக்கப்பட்டது. மற்ற பதவிகளுக்கு 1976-ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த அதே வயது வரம்பு நீடித்தது. துணைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகிய பதவி களுக்கு அப்போதும் வயது உச்ச வரம்பு கொண்டு வரப்படவில்லை.

1982-ஆம் ஆண்டு துணை ஆட்சியர், வணிகவரி அலுவலர், காவல் துறைத்

# சிறு-குறு விவசாயிகள் பயன்பெற மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

சிறு-குறு விவசாயிகளுக்குத் தேவையான கூட்டமைப்பு (Infrastructure) ஏற்படுத்தித் தருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட TANFHOPE நிறுவனத்தின் மூலம், சிறு-குறு விவசாயிகள் தோட்டக்கலை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட ஏதுவாகத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ. 40 இலட்சம் நிதியைத் தமிழகத் தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

சிறு-குறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள சிறு-குறு விவசாயிகளின் மேம்பாட்டிற்காக 1992-93 நிதியாண்டில் ரூ. 53.82 கோடி செலவில் 25 திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டன. இதில் திட்டங்கள் நிறைவேறியது போக எஞ்சியுள்ள தொகையில், கடந்த ஆண்டு ரூ.75 இலட்சம் செலவில் சிறு-குறு விவசாயிகள் வளர்ச்சிக்கென 'டான்ஹோப்' நிறுவனம் தொடங்கப்பட்டது.

தற்போது, தமிழ்நாட்டிலுள்ள சிறு-குறு விவசாயிகள் தோட்டக்கலை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வளர்ச்சி பெற ஏதுவாக அவர்களுக்கு 'டான்ஹோப்' மூலம் போதிய அடிப்படை வசதிகளைச் செய்து தர ஆணையிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறு-குறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் எஞ்சி யிருந்த தொகையிலிருந்து ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

துணைக் கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளுக்குப் பொதுவான வயது வரம்பு 28 எனவும், ஏனைய வகுப்பினருக்கு 33 எனவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மாவட்டப் பதிவாளர், துணைப் பதிவாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்கு வயது வரம்பு பொதுவாக 28 எனவும், ஏனைய வகுப்பினருக்கு வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படாமல் விடப்பட்டது. இந்த முறை 1987-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது.

*1994*-ஆம் ஆண்டு இப்பதவிகளுக்குப் பொதுவான வயது வரம்பு 28-லிருந்து 30-ஆக உயர்த்தப்பட்டது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்பினருக்கு வயது உச்ச வரம்பு 35 ஆக நிர்ணயிக்கப் பட்டது. துணைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்குப் பொதுவான வயது வரம்பு 30-ஆக நிர்ணயிக்கப்பட்டாலும், மற்ற வகுப்பினருக்கு அதிகப்பட்ச வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை.

தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்தும் இந்தத் தொகுதி ஒன்று தேர்வுகள், மத்திய அரசு தேர்வாணைக் குழு, (Union Public Service Commission) நடத்தும் IAS, IPS, IFS போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கு நடத்தும் தேர்வின் அடிப்படையில் அமைய வேண்டுமென்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை P & AR Department அரசு ஆணை எண்25ஐ 23.1.1995 அன்று வெளியிட்டது.

இந்த ஆணையின்படி தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்தும் தொகுதி ஒன்று தேர்வின் பாடத் திட்டம் - Syllabus, தேர்வு முறை - Examination, கல்வித்தகுதி - Educational Qualification ஆகியவைகள் மத்திய அரசுத் தேர்வாணைக் குழு பின்பற்றுகின்ற முறைகளின் அடிப்படையில் அமைகின்றன. இந்த ஆணையின்படி தொகுதி-1-இல் எட்டு வகைப் பதவிகளுக்கும், வயது உச்ச வரம்பு 30 எனவும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட, மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய சமுதாயத்தினருக்கு அதிகப்பட்ச வயது வரம்பு 35 எனவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மாவட்டப் பதிவாளர், துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்கு ஏற்கெனவே வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படாமல் இருந்ததால், இப்பொழுது அவர்களுக்கு 35 என வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**Thus it is an attempt to streamline the pattern for the Group-I examination on par with the Union Public Service Commission Examination.** The allegations that injustice has been caused to the persons belonging to Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes and Backward Classes is nothing but a wanton politicisation of the issue without going into its real merits.

இந்த ஒரே தொகுதியில் அடங்கியுள்ள பதவிகளுக்குத் தேர்வுகளை நடத்தி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, 5 பதவிகளுக்கு மட்டும் வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் மற்ற 3 பதவிகளுக்கு வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப் படாமல் இருப்பது முரண்பாட்டை வெளிப் படுத்தியுள்ளது. இது சட்டப்படி முறையானது தானா என்ற ஒரு முடிவு எடுக்க வேண்டிய பிரச்சினையாகவும் உருவாகலாம். தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள தற்போதைய ஆணை, இதுபோன்ற பதவிகளுக்குச் சீரான முறையில் வயது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஆகும்.

எடுத்துக்காட்டாக, 1976-ஆம் ஆண்டு வரை, துணை ஆட்சியர் பதவிக்கு வயது உச்ச வரம்பு இல்லாமல் இருந்தது. 1976-ஆம் ஆண்டு இப்பதவிக்கு வயது உச்ச வரம்பு 31 என நிர்ணயிக்கப்பட்டது. அவ்வண்ணமே 1995-ஆம் ஆண்டு வரை இப்பதவிக்கு பொதுவான வயது வரம்பு உயர்த்தப்பட்டும், குறிப்பாக SC/ST, BC & MBC வகுப்பைச்



**கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்க வேண்டிய அவசியமெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்குத் தகுதிப் படுத்துவது என்பதேயாகும். அல்லது, உலகில் நல்வாழ்க்கை வாழத் தகுதியுடையவனாக்குவது என்பதாகும்.**

சேர்ந்தவர்களுக்கு மற்றவர்களைவிட 5 ஆண்டுகள் வயது வரம்பு உயர்த்தப்பட்டது.

*1995*-இல் தற்போது மேலே கூறப்பட்ட 3 பதவிகளுக்கு மட்டும் உச்ச வரம்பு இல்லாமல் இருந்த நிலையை மாற்றி உச்ச வயது வரம்பு 35 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. **ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விகிதாச்சாரத்தில் எவ்வித மாற்றத்தையும் இந்த ஆணை ஏற்படுத்தாது.** வயது வரம்பு கொண்டு வரப்பட்டதால், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உயர் பதவிகளைப் பெறுவதில் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாது. இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த 35 வயதினைத் தாண்டாத இளைஞர்கள், அந்தச் சமுதாயத்தில் மிகவும் வயது முதிர்ந்தவர்களுக்குப் பதிலாக, இப்பணியினைப் பெறுவதற்கான வாய்ப்பு இந்த ஆணையின் மூலம் ஏற்பட்டுள்ளது.

**இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள்—அதாவது 35 வயதைக் கடக்காதவர்கள், இப்பதவியைப் பெறுவார்களேயானால், அவர்கள் 58 வயதை அடையும் வரை அரசுக்கும், சமுதாயத்திற்கும் நீண்ட காலம் பணியாற்றுகின்ற வாய்ப்பும் நீண்ட காலம் பணியாற்றும்போது அதிகமான பதவி உயர்வுகள் பெறுவதற்கும் வழி வகுக்கும்.**

**நாட்டு மண்ணுக்கு மதிப்பு உயர...**

**இந்த நாட்டு மண்ணுக்கு மதிப்பு உயர வேண்டுமானால், இங்கே உள்ள அறநூல்களின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையையே சான்றாக எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு வாழ்க்கை உயர வேண்டும்.**

— டாக்டர் மு.வ.

இந்த 8 பதவிகளுக்குச் சிலவற்றில் கல்வித் தகுதி இளநிலைப் பட்டம் B.A. B.Sc., B.Com., etc. மற்றும் சிலவற்றில் முதுநிலைப் பட்டம் M.Com. M.Sc., எனவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்பதவிகளில் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர் ஆகிய பதவிகளுக்கு மட்டும் எந்தவொரு பட்டதாரியும் போட்டியிட்டுத் தேர்வு பெறலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர்கள், கோட்ட வளர்ச்சி அலுவலர் மற்றும் கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஆகிய இரண்டு பதவிகளைத் தவிர மற்றைய 6 பதவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியாமல் இருந்தது. ஆனால், தற்போது அரசு பிறப்பித்துள்ள ஆணைப்படி, விண்ணப்பதாரர்கள் ஏதேனும் ஒரு பட்டம் பெற்றிருந்தாலே போதுமானதாகும். அவர்கள் அனைவரும் இந்த 8 பதவிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆகிறார்கள்.

**அதுமட்டுமின்றி, தொகுதி-1 தேர்வுக்குப் பாடத்திட்டம், கல்வித்தகுதி, தேர்வு முறை ஆகியவைகள் மத்திய அரசுத் தேர்வாணைக் குழு நடத்துகின்ற, அகில இந்தியப் பணித் தேர்வுக்கான தேர்வு முறைப் பாடத் திட்டம், கல்வித் தகுதி ஆகியவைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டால், தமிழகத்திலிருந்து IAS, IPS, IFS போன்ற அகில இந்தியப் பதவிகளுக்கு இது அதிக அளவில் போட்டியிடவும், வெற்றி பெறவும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.**

இந்த விவரங்களையெல்லாம் புரிந்து கொள்ளாத சிலரும், அவற்றைத் தவறுதலாகப் புரிந்து கொண்ட சிலரும், இதுவரை இந்தப் பதவிகளுக்கு வயது வரம்பே நிர்ணயிக்கப்படாமல் இருந்தது போலவும், இந்த அரசு வந்த பின்புதான் திடீரென நிர்ணயிக்கப்பட்டது போலவும், பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்ப முற்படுவது, முற்றிலும் அரசியல் உள்நோக்கம் கொண்ட பிரச்சாரம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, பொதுமக்களைத் திசை திருப்பும் தவறான செயல்களில் இனியும் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

## நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்:

# நேதாஜி பிறந்தநாள் விழா

**தி**ருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் பாளையங்கோட்டை நகராட்சி திருமண மண்டபத்தில் 11.3.95 அன்று, தமிழக அரசின் சார்பில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த நாள்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, 131 நபர்களுக்கு ரூ.5.32 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

விழாவிற்குத் தலைமையேற்ற மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

"மங்காப் புகழ்பெற்ற மாவீரர் நேதாஜியின் வீர வரலாற்றை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள இன்றைய தினம் தமிழக அரசின் சார்பில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. இந்திய நாட்டில் வெள்ளையர்கள் ஆதிக்கத்தை ஒழிக்கவும், நாடு சுதந்திரம் பெறவும் பல்வேறு தேசத்தலைவர்களால் சத்தியாக் கிரகம், உண்ணாவிரதம், சிறை வாசம் என மிதவாதத் தலைவர்களால் சுதந்திரப் போராட்டங்கள் நடைபெற்ற காலத்தில் வீரத்துடன், தீரத்துடன் இலட்சிய உறுதியுடன் பிடிவாதத்துடன் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கியே தீர வேண்டும் என்ற இலட்சியத்தை நெஞ்சில் தாங்கிப் போராடியவர் தான் நேதாஜி சுபாஷ் சந்திர



போஸ்.

"சுதந்திரத்தை அவர்களாகத் தருவதைவிட நாமாகப் பெற்றால் தான் அதன் உணர்வு தெரியும் என நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற உழைத்தவர் நேதாஜி என்றும், இதுபோல் நாட்டுக்கு உழைத்த வீரர்களுக்கு விழா எடுப்பதும், வித்தகர்களுக்குச் சிலை அமைப்பதும், பெரியோரை மதிப்பதும் தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழக அரசு.

இந்த அரசு, தியாகிகளில் வேறுபாடு காணாமல் அனைவர்க்கும் ஒரே விதத்தில்தான் சிறப்புச் செய்து வருகிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரனார், இராஜாஜி, அண்ணல் காந்தியடிகள் போன்ற நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் வரிசையில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கும் விழா எடுக்கிறோம். இன்று யார், யாரோ "ஜெய்ஹிந்த்" என்ற வார்த்தையைச் சொல்லி வருகிறார்கள். ஆனால், சுதந்திரப் போராட்டக் காலத்தில் முதன் முதலாக "ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை முழங்கியவர் நேதாஜி அவர்கள்.

இந்தியத் தேசியப் படை அமைத்த காலத்தில் தன்னுடன் வந்தவர்களை நேதாஜி இரத்தத்தின் ரத்தமே என அழைத்து ஒன்று கூட்டிச் சென்றார். அதனைத் தான் புரட்சித் தலைவர் அவர்கள் தனது தொண்டர்களைப் பார்த்துப் பாசத்துடன் இரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே என அழைத்தார்.



**பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு முதன்முதலில் ஒழுங்கு முறையைப் புகட்டுவதில் தான் கவலை வேண்டும். அதுதான் முக்கியம். பிறகு அடுத்தபடியாக உள்ளதுதான் கல்வி. முதலில் எப்படிப் பழக வேண்டும் என்ற நல்லொழுக்கத்தைப் புகட்ட வேண்டும். நல்லொழுக்கந்தான் ஒரு மனிதனைப் பிற்காலத்தில் சிறந்த பண்புடையவனாக ஆக்குகிறது.**

நெப்போலியன், ஆப்ரகாம் லிங்கன், ஜார்ஜ் வாஷிங்டன், வீர அசோகன் போன்றவர்களின் வீர வரலாற்றைப் போல் இந்திய மண்ணில் உதித்தவர்தான் நேதாஜி. சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் இந்த மண்ணில் 48 ஆண்டுக் காலம் தான் வாழ்ந்தார் என்றாலும், நாடு நிச்சயம் சுதந்திரம் அடையும் என்ற நம்பிக்கையுடன் போராடினார்.

புத்தன், ஏசு, சாக்ரடீஸ் போல் தாம் வாழ்ந்த காலத்தில் வெற்றி பெறாவிட்டாலும் தான் போராடிய இலட்சியத்தை இறந்த பிறகாவது நாட்டு மக்களுக்கு வழங்கிய வரிசையில் நேதாஜி இடம் பெற்றதால் நாம் அவரை இன்று வாழ்த்துகிறோம்.

"நேதாஜியின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாட இன்று அவரது கொள்கை, எண்ணம், பண்பு, இலட்சியம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குத்தான் தகுதி உண்டு, அதனால் இன்று நேதாஜியின் பிறந்த நாள்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்" எனத் தெரிவித்தார்.

விழாவில் நேதாஜி திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

"நாட்டுக்குழைத்த நல்லவர்கள் பற்றி, பாடப் புத்தகங்களில் வருங்காலச் சந்ததியினர் ஓரளவு தெரிந்துகொண்டாலும், இதுபோல் அரசு விழா எடுப்பதன் மூலம் ஏழை, எளிய மக்களும், படிப்பறிவில்லாத மக்களும் தெரிந்து கொள்ள வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மக்கள் உணரவும், விழிப்புணர்வு பெறவும் அரசு விழா எடுக்கிறது. அந்தந்த மாவட்டங்களில் சிறப்புப் பெற்ற தலைவர்களுக்குத் தமிழக அரசு விழா எடுத்து வருகிறது. அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் நேதாஜியின் உணர்வு பெற்றவர்கள் அதிகம் உள்ளதால், நெல்லை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையிலான அரசு இன்று விழா நடத்துகிறது.

"சுதந்திரப் போராட்டக் காலத்தில் அமைதிப்போர், தீவிரவாதப் போர் என நடைபெற்று வந்ததில் தீவிரவாதப் போருக்குத் தலைமை கொண்டு வீரத்தோடும், தெளிவுடனும் வெள்ளையர்களை விரட்டப் போராடியவர்தான் நேதாஜி

சுபாஷ் சந்திரபோஸ். அன்று நாடு சுதந்திரம் அடையப் போராடிய நேதாஜி தீவிரவாதியானார். ஆனால் இன்றும் சிலர் வேறு விதங்களில் தீவிரவாதிகளாகிறார்கள். அத்தகைய தீய சக்திகளை அடக்கி வருபவர் தான் நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்" என்று தெரிவித்தார், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த 66 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவும், 'தாட்கோ' மூலம் மூன்று நபர்களுக்குத் தொழில் கடனாக ரூ.4 இலட்சத்து 66 ஆயிரமும், நலிவுற்றோர் விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் 6 நபர்களுக்கு 35 ஆயிரமும், சிறு சேமிப்பில் 14 இலட்சத்து 57 ஆயிரத்து 500 சேமித்த 33 முத வீட்டாளர்களுக்கு 28 ஆயிரத்து 505 ஊக்கத்தொகையும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் இரண்டு நபருக்கும், கலப்புத் திருமண உதவித் திட்டத்தில் ஒரு நபருக்கும் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 15 ஆயிரமும், ஐந்து ஆதி திராவிடப் பெண்களுக்கு இலவசத் தையல் இயந்திரமும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 7 குழந்தைகளுக்குத் தங்க மோதிரமும், 8 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையும் வழங்கினார் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள்.

விழாத் தொடக்கத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரையாற்றினார்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு என். தங்கராஜ்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பி. தர்மலிங்கம், திரு வே. கோபால கிருஷ்ணன், திரு ஆர். முருகையா பாண்டியன், திரு டி. வேலையா, திரு ஆர்.பி. ஆதித்தன் ஆகியோர் இவ்விழாவில் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்று திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) மாவட்ட வருவாய் அலுவலர் திரு வே.மு. சேவியர் கிரிசோநாயகம் அவர்களும், நன்றி தெரிவித்து செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (செய்தி) திரு இரா. பரதன் அவர்களும் பேசினார்கள்.

விழா தொடங்குமுன் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.


தமிழரசு

**சந்தா விவரம்**

**'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)**

**ஆண்டுச் சந்தா ... ரூ. 72**

**அரையாண்டுச் சந்தா ... ரூ. 36**

**'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)**

**ஆண்டுச் சந்தா ... ரூ. 36**

**சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**உதவி இயக்குநர்**
**'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்**
**சென்னை 600 002.**

தமிழரசு

**படிக்க - பயன்பெற - பாதுகாக்க**



# சுங்குவார்சத்திரம் சாலை விபத்து:

# பலியானோர் குடும்பத்துக்குத் தலா ரூ.25,000 வழங்க மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

## படுகாயமடைந்தோருக்கு நேரில் ஆறுதல்

செங்கல்பட்டு - எம்.ஜி.ஆர் மாவட்டம் சுங்குவார்சத்திரத்திற்கு அருகில் **12.3.1995** அன்று முற்பகல் **11.30** மணி அளவில் கெமிக்கல் ஆயில் ஏற்றி வந்த டாங்கர் லாரி, அரசுப் போக்குவரத்துக்கழகப் பேருந்து ஒன்றின் மீது நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஏற்பட்ட சாலை விபத்தினால் தீப்பிடித்துக் கொண்டதால் ஏற்பட்ட பெரும் விபத்துக் குறித்தும், அதில் பலபேர் மரணம் அடைந்ததையும் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இச்சம்பவம் குறித்து தனது ஆழ்ந்த துயரத்தையும், இரங்கலையும் வெளியிட்டார்.

பின்னர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆகியோர், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளை விரைவுடன் மேற்கொள்ளுமாறு ஆணையிட்டார். இச்சம்பவத்தில் காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாகத் தேவையான மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கும், மற்ற நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் ஆணையிட்டார்.

இச்சம்பவத்தில் **40** பேருக்கு மேல் மரணம் அடைந்து இருக்கக் கூடும் என்ற செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரிடையாகச் சம்பவ இடத்திற்கு வந்து, காவல்துறை இயக்குநர் திரு. ஸ்ரீபால், காவல் துறைக் கூடுதல் இயக்குநர் திரு வால்டர் தேவாரம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ராமமோகன ராவ், ஆகியோரிடம் விபத்து நடந்தது பற்றியும், நிவாரணப் பணிகள் மேற்கொள்வது பற்றியும்

கேட்டறிந்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

தீக்கிரையாகிக் கிடந்த பேருந்தையும், டாங்கர் லாரியையும், டிராக்டரையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். அங்கு உயிர் நீத்தவர்களின் சடலங்கள் வைக்கப் பட்டிருந்த இடத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் உயிர் நீந்தவர்களின் உறவினர்களையும், குடும்பத்தாரையும் நேரில் சந்தித்து தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்றும், இருப்பினும் அவர்கள் மனம் தளராமல் தைரியமாக இருக்க வேண்டும் என்றும் வழங்கப்படும் என்றும், அதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

அவர்களது துக்கத்தில் தானும் பங்கு கொள்வதாகவும், இந்த நிகழ்ச்சி தனக்குப் பெரும் துயரத்தை அளித்திருப்பதாகவும் தெரிவித்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், அவர்கள் மனதை அமைதிப்படுத்திக் கொள்ள



பின்னர், டிராக்டரில் வந்தவர்களின் பெரும்பாலானோர் சம்பவம் நடந்த இடத்திற்கு 2 கிலோ மீட்டர் தள்ளியுள்ள பொடவூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் சடலங்கள் கொண்டு செல்லப்பட்டதையும் அறிந்தவுடன், நேராகப் பொடவூர் கிராமத்திற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சென்றார். அங்கே உயிர்நீத்தவர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு

ஆறுதல் கூறினார்.

இறந்து போனவர்களின் ஒவ்வொரு நபரின் குடும்பத்தாருக்கும் 25,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்றும், தீக்காயம் ஏற்பட்டவர்களுக்கு 10,000 ரூபாய் மருத்துவச் சிகிச்சைக்காகவும், மற்ற காயம் அடைந்தவர்களுக்கு 5,000 ரூபாய் மருத்துவச் செலவுக்கு வழங்கப்படும் என்றும் அறிவித்தார். இந்தச் சம்பவத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 7 நாட்களுக்கு உணவு

வேண்டும் என்று ஆறுதல் கூறினார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை அழைத்துத் தேவையான உதவிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டார்.

பின்னர், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் பொது மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்ற 11 பேரை நேரில் சந்தித்து, அவர்களின் உடல்நலனை விசாரித்ததோடு அவர்களுக்கு அளித்து வருகின்ற

மருத்துவச் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். அவர்களுக்கு ஹார்லிக்ஸ், பழங்கள், பிஸ்கெட்டுகள் ஆகியவற்றை வழங்கி ஆறுதல் கூறினார்.

காயம் அடைந்தவர்களுக்கு — குறிப்பாகத் தீக்காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும், அவசியம் ஏற்பட்டால் மற்ற இடங்களிலிருந்து மருத்துவர்களை வரவழைத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும், ஒவ்வொருவருக்கும் கொசுவலை வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் சென்றிருந்தனர்.

இந்த விபத்தில் மொத்தம் 48 பேர் மரணம் அடைந்துள்ளார்கள், (அதில் ஆண்கள் 19 பேர், பெண்கள் 19 பேர், குழந்தைகள் 10 பேர்) டிராக்டரில் பயணம் செய்தவர்களில் 34 பேர்களும், பேருந்தில் பயணம் செய்தவர்களில் 12 பேரும், டாங்கர் லாரியில் பயணம் செய்தவர்களில் 2 பேரும் ஆக மொத்தம் 48 பேர் மரணம் அடைந்து உள்ளார்கள். இந்த விபத்தில் காயம் அடைந்தவர்களில் 11 பேர் காஞ்சிபுரம் பொது மருத்துவமனையிலும், 5 பேர் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலும், சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் 10 பேர் சாதாரண காயங்களுக்காக ஸ்ரீபெரும்புதூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்கள்.



# விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க மாண்புமிகு முதல்வர் நடவடிக்கை

தமிழகத்தில் விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்காகவும், விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்துவதற்காகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளார்.

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு தங்கப் பதக்கம் பெறுபவர்களுக்கு HIG குடியிருப்பு அல்லது வீட்டுமனை, வெள்ளிப் பதக்கம் பெறுபவர்களுக்கு MIG குடியிருப்பு மற்றும் வெண்கலப் பதக்கம் பெறுபவர்களுக்கு LIG குடியிருப்பு வழங்க வேண்டும் என ஆணை பிறப்பித்துள்ளார்.

1994 ஜூன் மாதம் பாங்காக்கில் நடைபெற்ற உலகக் குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் சார்பில் போட்டியிட்டு வெண்கலப் பதக்கத்தை வென்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் திரு தேவராஜன் அவர்களுக்கு அவரது விளையாட்டுத் திறனைப் பாராட்டுமுகத்தானும் மேலும் சிறப்புகளைப் பெறுவதற்கு ஊக்கப்படுத்துவதற்காகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக வீட்டு வசதி வாரியத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒரு குடியிருப்பினை (FLAT) இலவசமாக ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

# ஊக்கமும் நோக்கமும்!

## மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
## திரு. எஸ். முத்துசாமி அவர்கள்

நம்முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டை எல்லோரும் பார்த்து வியந்து போகின்ற வகையிலே இங்கே கூட்டி நேற்றைக்கு **(1.1.95)** அதனுடைய துவக்கமாக, மிகப் பெரிய ஒரு ஊர்வல நிகழ்ச்சியாக அது துவங்கி, இன்றைக்குப் பொது அரங்க நிகழ்ச்சிகளிலே முதல் நிகழ்ச்சியாக இந்த வாழ்த்தரங்க நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

இந்த மாநாட்டைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். நான் எதைச் சொன்னாலும் அதை நீங்கள் நேரடியாகப் பார்த்திருக்கின்ற ஒரு கருத்தாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரிகிறது. புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தஞ்சையைத் தேர்ந்தெடுத்து- எட்டாவது உலகத் தமிழ் மாநாடு இங்கே நடத்தப்பட வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள். அதற்குண்டான ஒவ்வொரு பணியையும் நேரடியாக அவரே ஒவ்வொன்றாகப் பார்த்துச் செயல்படுத்தினார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒவ்வொன்றையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

துவக்க விழா நிகழ்ச்சியிலே இந்தியக் குடியரசினுடைய துணைத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு துவக்கி வைத்த போது, இங்கே வருகை தந்திருக்கின்ற இந்தியக் குடியரசினுடைய முன்னாள் தலைவர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொல்லிய ஒரு கருத்து எங்களுடைய உள்ளத்திலே மிக அதிகமாகப் பதிந்து இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க வேண்டும்.



அவர் மனம்விட்டு ஒன்றைச் சொன்னார். உள்ளத்தினுடைய அடித்தளத்திலேயிருந்து ஒரு கருத்தைச் சொன்னார். என்னுடைய 10 வயதிலிருந்து நான் பார்க்கிறேன், இதுபோன்ற ஒரு மாநாடு இந்தப் பகுதியிலே நடந்தது இல்லை என்று அவர் சொல்லிய அந்தக் கருத்து எங்களுக்கு மிகப் பெரிய ஊக்கத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநாடு நடத்துவதனுடைய நோக்கம் தமிழர்களுடைய பெருமை இன்று உலகத்திற்கு மட்டும் தெரிவது மட்டுமல்ல; அதனுடைய வளர்ச்சி ஒளிமயமானதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே— என்ற நோக்கத்திற்காக இந்த மாநாடு நடத்தப்படுகிறது என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். நான் அதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் சில மாறுபட்ட கருத்துக்களைக் கூடப் பல பேர் சொல்கிறார்கள் என்ற காரணத்தால், நோக்கம் அதுதான் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தக் கருத்தை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஊர்வலத்தில் 54 அலங்கார ஊர்திகள் வந்தன. ஒவ்வொன்றும் நம்முடைய தமிழகத்தினுடைய பெருமையையும், தமிழர்களுடைய பெருமையையும், தொன்மையான தமிழ் எப்படி இருந்தது என்பதையும் சித்திரிக்கின்ற அந்த அலங்கார ஊர்திகளாகத்தான் ஒவ்வொன்றும் வந்தது என்பதை மக்கள் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள். அப்படிப்பட்ட சிறப்போடு இம் மாநாடு மிகச் சிறப்பாகத் துவங்கியிருக்கிறது. இந்த மாநாடு 5 நாட்கள் நடந்து முடிந்த பின்னாலே நிச்சயமாக நம்முடைய தாய்த் தமிழுக்கு, உயிருக்கு மேலான இன்பத் தமிழுக்கு நிச்சயமான ஒரு எதிர்காலம் பிரகாசமானதாக அமையும் என்பதிலே எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது.

இங்கே, இந்த வாழ்த்தரங்கத்திலே நான் ஒன்றை மட்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் தாய் மொழிப் பற்றும், தாய் நாட்டுப் பற்றும் சேர்ந்து இருக்க வேண்டும். அதுதான் நமக்கு— மிக அடிப்படையான நம் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**—தஞ்சையில் நடைபெற்ற 8-ஆம் உலகத் தமிழ் மாநாட்டில், ஆற்றிய உரையிலிருந்து.**

## தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

தமிழக அரசு ஆண்டுதோறும் வயது முதிர்ந்த, ஏழ்மையில் வாடுகின்ற தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ் மொழிக்கும் பெருந்தொண்டாற்றியுள்ள நலிவுற்ற தமிழ் அறிஞர்கள் 15 பேருக்கு, மாதந்தோறும் ரூ.400 நிதி உதவிகளை அவர்கள் காலம் முடிவுறும் வரையிலும், அவர்களுக்குப் பின்னர் அவர்களது மனைவியர் காலம் வரையிலும் வழங்கும் திட்டத்தினை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், 1994-95-ஆம் ஆண்டிற்கான 15 தமிழ் அறிஞர்கள் அடங்கிய உதவி பெறத் தகுதியுடையோர் பட்டியலை இதற்காக அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு ஒன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்குப் பரிந் துரை செய்திருந்தது.

நலிவுற்ற தமிழ் அறிஞர்கள் நிதி உதவித் திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட 15 தமிழ் அறிஞர்கள் அடங்கிய பட்டியலை முழுமையாக ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.400 நிதி வழங்க ஆணையிட்டுள்ளார்.

நடப்பு ஆண்டில் இந்த நிதி உதவியினைப் பெறும் தமிழ் அறிஞர்களின் பெயர்கள் வருமாறு:

1. திரு அ.க. நடராசன், சென்னை.
2. திரு ச. வீரபாகு, திருநெல்வேலி.
3. புலவர் ம. சாமிநாதன், வீரவநல்லூர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
4. திரு வேல் சம்பந்தமூர்த்தி, தஞ்சாவூர்.
5. திரு கே.சி.எஸ். அருணாசலம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
6. திரு எஸ். சீனிவாசன், சென்னை.
7. திரு ம. கன்னியப்பன், சென்னை.
8. கவிமணி பெரும்புலவர் டாக்டர் ச. ஆறுமுகநாதன், சென்னை.
9. திரு மு. குருசாமி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
10. திரு ச. செல்லப்பாண்டியன், கீழ்ப்புலியூர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
11. திரு கொ. அடைக்கலம், சென்னை.
12. திரு அ. வெள்ளையப்பன், சிவகிரி வட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
13. திரு ஆ. கந்தசாமி, திருவண்ணாமலை.
14. திரு ஜி. பஞ்சாபகேசன், தஞ்சாவூர்.
15. திரு ஒய்.வி. நாகராசன், சென்னை.

# ஆட்சிமொழி

## தமிழ்நாடு காவல்துறைத் தலைவர்
## திரு. எஸ். ஸ்ரீபால் அவர்கள்

**ஆ**ட்சிமொழி என்பதைப் பற்றி நடக்கிற கருத்தரங்கம் இது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை மொழியைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது-

`மொழி என்பது ஒரு பெரிய நகரம், அந்தப் பெரிய நகரத்தைக் கட்டுவதற்காக வாழ்கிற ஒவ்வொரு மனிதனும் ஒரு கல்லைக் கொண்டுவர வேண்டுமென்று' குறிப்பிட்டார்கள். அப்படி ஆட்சிமொழி என்பது தமிழாக வழங்கவேண்டும், வளர வேண்டும் என்று நாம் எண்ணுகிறபொழுது, ஒவ்வொருவரும் முனைப்போடு அந்த முயற்சியிலே ஈடுபடுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகவேண்டும். ஆட்சி என்று குறிப்பிடுகிறபொழுது, உலக வரலாற்றில் இரண்டு சித்தாந்தங்களை நாம் பார்க்கிறோம்.

ஒவ்வொரு குடிமகனும் வளர்வதற்காக ஆட்சி என்பது ஜனநாயகம். நாட்டிற்காக மனிதன், குடிமகன் என்பது ஜனநாயகம் இல்லை. ஆனால், இரண்டாவது நான் குறிப்பிட்ட இந்தச் சித்தாந்தங்கள் இன்றைக்கு உலகத்தில் கரைந்து போகிற ஒரு காட்சியை நாம் கண்டுகொண்டு இருக்கிறோம். அதனாலே குடிமகன் வளர்வதற்காக ஆட்சி என்று சொல்லுகிறபொழுது, நாட்டிலே வாழ்கிற ஒவ்வொரு குடிமகனும் அந்த ஆட்சியிலே பங்கேற்க வேண்டும். அப்படிப் பங்கேற்பதற்கு, அவனுக்குப் புரிகிற மொழியிலே, ஆட்சியிலே இருக்கிற ஆவணங்கள், ஆட்சியாளர்கள் தருகிற சட்டங்கள், ஆணைகள், உத்தரவுகள் இருக்க வேண்டும் என்பது நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.

*1919*-ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்டு இயற்றிய சட்டத்திற்குப் பின்னாலே இந்தியாவிலே இரட்டை ஆட்சி முறை உருவாகியது. இரட்டை ஆட்சி முறை உருவான பின்னால் இந்தியர்களுக்கும் ஆட்சியிலே பங்கு தர வேண்டும் என்று ஒரு காலகட்டம் தோன்றியது.

நாம் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கிறபொழுது, அன்றைக்கு



இருக்கிற சட்டமன்றக் குறிப்பு களையெல்லாம் எடுத்துப் பார்க் கிறபொழுது, முதன்முதலில் சட்ட மன்றத்தில் தமிழில் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்தவர் யார் என்று பார்க்கிறபொழுது, **1921**-ஆம் ஆண்டு மார்ச் மாதம் **28**-ஆம் தேதி திரு எம்.சி. முத்து செட்டியார் என்பவர் முதன் முதலில் சட்டமன்றத்தில் தமிழிலே பேசியிருக்கிறார்.

அதே ஆண்டு அனக்காபள்ளி நகர்மன்றத்திலே இருந்த நகர்மன்ற நடவடிக்கை எல்லாம் தமிழிலே நடைபெறவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை அன்றைக்கு அனுப்பி, நகர்மன்ற நடவடிக் கைகள் தமிழிலே நடைபெறலாம் என்ற ஒரு ஆணையையும் **1921**-ஆம் ஆண்டு பொறுப்பிலே இருந்தவர்கள் அந்த உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஆட்சிமொழி வரலாற்றிலே நாம் குறிப்பிட வேண்டியவை என்று கூறலாம். **1928**-ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே திரு. சத்திய மூர்த்தி அவர்கள் பேசுகிற பொழுது, **1923**-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பல்கலைக் கழகச் சட்டத்தில், வெர்னாகுலர் என்ற ஒரு சொல் இருக்கிறது. வெர்னா குலர் என்ற அந்தச் சொல் வட்டார மொழிகளைக் குறிக்கிற சொல், 'வெர்னாகுலர்' என்று சொன்னால், அது அடிமைகளின் மொழி என்று பொருள்பட இருக்கிறது. எனவே, அந்தச் சொல் நீக்கப்பட வேண்டும் என்ற ஒரு வாதத்தை வலியுறுத்தி வைத்து, அது ஏற்கப்பட்டது என்று குறிப்பிடுவார்கள். இவையெல் லாம் தமிழ்நாட்டில் ஆட்சிமொழி தமிழ் என்பதற்கு முதன்முதலில் தோன்றிய முன்னோடிகள் என்ப தற்காக இதைக் குறிப்பிட்டேன்.

பதினைந்தாம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய கண்டத்தைப் பார்க்கிறபோது, இலத்தீனும் கிரீக்கும் ஆட்சியாளர்கள் மொழி யாகப் பயன்படுத்தப்பட்டு வந்த வரலாற்றை நாம் அறிவோம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சர்வதேச அமைப்புகள், லீக் ஆப் நேஷன்ஸ் போன்ற அமைப்புகள் பிரெஞ்ச் மொழியிலே இயற்றப் பட்டதை அறிகிறோம். இன்றைக் குக்கூட பல சர்வதேச உடன்படிக் கைகள் அந்த மொழியிலே உரு வாக்கப்படுகின்றன. இந்த வர லாற்றையெல்லாம் நாம் உற்று நோக்குகிறபொழுது நமக்கு ஒரு கருத்து தெளிவாகப் புலப்படு கிறது. ஆட்சிமொழி தமிழாக இருக்கவேண்டும் என்று நாம் நினைக்கிறபொழுது, இந்த ஆட்சி யின் அதிகாரத்தைப் பயன்படுத் துகிற அதிகாரிகள் தமிழர்களாக, தமிழ் மீது பற்று உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று விளங்குகிறது. அதனாலே நான் இந்த இந்தியக் காவல்துறைப் பணியிலே சேருகிறபொழுது, ஏறக்குறைய **34** ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பயிற்சிப் பள்ளி யிலே இருக்கிறபொழுது **39** சதவிகிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்த வர்களாக இருந்தார்கள்.

இன்றைக்கு அந்த நிலை இருக்கிறதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## அரசு மகளிர் கலைக் கல்லூரியில் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் உதவி!

**த**ஞ்சையில் கடந்த **5.1.1995** அன்று நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தனது விழாப் பேருரையில், மயிலாடுதுறையிலுள்ள தர்மபுரம் ஞானாம் பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 'செயல்முறைத் தமிழ்' என்ற புதிய பாடத் திட்டத்தினை இந்த ஆண்டு முதல் துவக்கி உள்ளதைப் பாராட்டி, தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் வகையில், எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றதன் நினைவாக, அந்தக் கல்லூரியில், புதிய கட்டடம் கட்டிக் கொள்வதற்கு, **10** இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர் களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, மயிலாடு துறையிலுள்ள தர்மாபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் புதிய கட்டடம் கட்டிக் கொள்ள **10** இலட்சம் ரூபாய் அரசுத் தரப்பில் வழங்கி ஆணை பிறப்பித் துள்ளார்.

# சென்னையில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

**கா**ட்டாற்று வெள்ளமாய், கட்டுப்பாடற்று வீணாகும் இளைஞர்களின் திறமைகளையும், எழுச்சியையும் ஒருமுகப்படுத்தி அவர்களை ஒழுக்கத்தோடு உயர்வடையச் செய்கிற ஒப்பற்ற பணியை விளையாட்டுத்துறையின் மூலம் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

கிராமிய அளவில், மாவட்ட அளவில், மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளித்த தமிழ்நாட்டு மக்கள் பெருமை கொள்ளும் வகையில், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் மாதம் 20-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதி முடிய பத்து நாட்களுக்குச் சென்னையில் பிரம்மாண்டமாக நிகழ்வுற இருக்கின்றது. இதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூ.120 கோடி நிதியொதுக்கியுள்ளார்.

இந்தியா உட்பட 9 நாடுகள் 14 வகையான போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கின்றன இந்நிகழ்ச்சி சென்னையில் நடப்பதால் நம் நாட்டு விளையாட்டு வீரர்களிடையே உற்சாகத்தையும், எழுச்சியையும் மேம்படுத்தி, தன்னம்பிக்கையை உயர்த்தும் எனலாம்.

போட்டிகளின் தொடக்க நாளிலும், நிறைவுநாளிலும் காண்போரை மகிழச் செய்யும் தமிழ் நாட்டின் கலையை, பண்பாட்டை விளக்கும் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறவுள்ளன.

### தெற்காசிய நாடுகளின் விளையாட்டு இணையம்

தெற்காசிய நாடுகளான இந்தியா, வங்காளதேசம், பூட்டான், மாலத்தீவு, நேப்பாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளிடையே ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும்வலுப்படுத்தவும்,விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தவும் தெற்காசிய நாடுகளின் விளையாட்டு இணையம் 1984-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இது வரை ஆறு போட்டிகள் நடத்தப் பட்டன.

இதற்கு முன்னர் நடந்த ஐந்தாவது போட்டி இலங்கை - கொழும்பு நகரில் 1991-ஆம் ஆண்டும், ஆறாவது போட்டி வங்காளதேசம் டாக்கா நகரில் 1993 ஆம் ஆண்டும், நடைபெற்று உள்ளது.

### தயாராகிறது சென்னை !

இரண்டாண்டுகளுக்கு முன் சென்னையில் சர்வதேசத் தரம் வாய்ந்த ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை ரூ.40 கோடி செலவில் குறுகிய காலத்தில் கட்டி முடித்து, அதில் நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டியையும், சர்வதேசத் தடகளப் போட்டிகளையும் உலகத்தின் மூலை முடுக்கில் உள்ளவரெல்லாம் பாராட்டும் வண்ணம் மிகச் சிறப்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நடத்திக் காட்டினார். இது தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையில் ஒரு மறுமலர்ச்சியாகும்.

அதனைத் தொடர்ந்து, ஏழாவது தெற்காசியப் போட்டிகள் சென்னையில் நடத்துவதற்கு, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், டாக்டர் ஜெ.ஜெயலலிதா விளையாட்டு உள்ளரங்கம், கிண்டியிலுள்ள ஐ.ஐ.டி. வளாக மாணவர்கள் மையம் போன்ற சர்வதேசத் தரம் வாய்ந்த அரங்குகளும் சிறப்புற அமைந்துள்ளன. இது



# முதலமைச்சருக்குச் சர்வதேச ஒலிம்பிக் சங்க விருது




விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் புரிந்த சேவைக் காகவும், உலகம் முழுவதும் சர்வதேசச் சுற்றுப்புறச் சூழல் ஆண்டாகக் கொண்டாடப்பட்ட 1993 இல் சுற்றுப்புறச் சூழல் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அரும்பணிக்காகவும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு 24.8.94 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் சிறப்பு விருது வழங்கப்பட்டது.

தவிர சர்வதேசப்போட்டிகளை நடத்திய அனுபவமும் ஏற் கெனவே சென்னை மாநகரத் திற்கு உண்டு.

இந்தியாவைப் பொறுத்த வரை, இந்த 'சார்க்' விளை யாட்டுப் போட்டிகள் இரண்டாம் முறையாக நடத்தப்படுகின்றன. இதற்கு முன்னால் 1987-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடத்தப் பட்டது.

**சர்வதேசத் தரத்தில் புதிய விளையாட்டரங்கங்கள்**

சென்னையில் தொடர்ந்து 10 நாட்கள் நடக்கவிருக்கும் இந்தப் போட்டிகளில் 9 நாடுகள் கலந்துகொள்கின்றன. பதினான்கு வகையான விளையாட்டுகள் இடம்பெறுகின்றன. இந்தப் போட்டிகள் நடைபெற வசதியாக சர்வதேசத் தரம் வாய்ந்த நவீன விளையாட்டரங்கங்கள் ரூ.45.46 கோடி செலவில் கட்டப்பட வுள்ளன. அவற்றுள் பன்னோக்கு விளையாட்டு உள்ளரங்கம், ஹாக்கி, டென்னிஸ் அரங்கங்கள் போன்றவை அடங்கும்.

**'சார்க்' விளையாட்டுக் கிராமம்**

பல்வேறு விளையாட்டுத் துறை யைச் சேர்ந்த ஏறக்குறைய 2000 விளையாட்டு வீரர் – வீராங் கனைகள் மற்றும் 1500 விளை யாட்டு அலுவலர்கள் இப்

# விளையாட்டு வளர்ச்சியில் முதல்வரின் ஆர்வம் !

ஆறாவது தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டி 1993-ஆம் ஆண்டு டாக்காவில் நடைபெற்றது.

போட்டியின் நிறைவுநாளில் அடுத்த போட்டியை ஏற்று நடத்தும் நாடு, விளை யாட்டுப் போட்டி தீபத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது மரபு, அதன்படி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமது சார்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்களை டாக்கா விற்கு அனுப்பி அடுத்த போட்டியைச் சென்னையில் நடத்த அழைப்பு விடுத்து, போட்டியின் தீபத்தை பெற்றுக்கொள்ளச் செய்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளை யாட்டுத் துறை மீது கொண்டுள்ள ஆர்வத் திற்குப் பல சான்றுகள் இருந்தாலும், இந்த ஏழாவது தெற்காசியப் போட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களின் மணிமகுடத்தில் ஒரு மாணிக்கக் கல்லாக ஒளிவீசப் போகிறது.

போட்டிக்காகச் சென்னைக்கு வர இருக்கிறார்கள். இவர்கள் தங்கு வதற்காக, சென்னை அருகே கோயம்பேடு, பகுதியில் 'சார்க் விளையாட்டுக் கிராமம்' 32 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் தக்க வசதிகள் கொண்ட 500 குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அமைத்து வருகிறது. மேலும், வருகைதரும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளையும், வெளி நாட்டு விருந்தினரையும் வரவேற்க வரவேற்பு மையம், நிர்வாகக் கூடம், வங்கி, தொலைத் தொடர்பு வசதிகள், மின்விளக்கு, அடிப்படை வசதிகள்யாவும் சிறப் பாகத் திட்டமிடப்பட்டு அமைக்கப் பட்டு வருகின்றன.

**சுடர் ஏந்திய சிங்கக் குட்டி இலச்சினை !**

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசியப் போட்டி களுக்கான இலச்சினையாக இன் முகத்தோடு, கையில் சுடரேந்தி, கம்பீரமாகத் துள்ளியோடும் சிங் கக் குட்டி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

**முதல் கட்டக் கூட்டம்**

இப் போட்டிகள் தொடர்பான தெற்காசிய உறுப்பு நாடுகளின் முதல் கட்டக் கூட்டம் 7.2.95 அன்று சென்னையில் நடை பெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், ஒருங்கிணைப்புக் குழுச் செயலாளர்கள், தமிழ்நாடு கனிமவள நிறுவனத் தலைவர் திரு தியானேஸ்வரன், இ.ஆ.ப., காவல்துறைக் கூடுதல் தலைவர் திரு டபிள்யு ஐ. தேவாரம், இகாப., தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி மேம்பாட்டு ஆணையத்தின் அப் போதைய உறுப்பினர் செயலாளர் திரு பி. டபிள்யு டி. டேவிடார், இ.ஆ.ப., மற்றும் உறுப்பு நாடு களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு, ஏழாவது தெற்காசியப் போட்டிக்களுக்கான முன்னேற் பாட்டுப் பணிகள் பற்றி ஆலோ சனைகளை வழங்கினார்கள்.

உலகம் போற்றும், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டால் தஞ்சாவூர் நகரத்துக்குப் பல அடிப்படை வசதிகள் கிடைத்த தைப் போல் இந்தத் தெற்காசியப் விளையாட்டுப் போட்டிகள் சென்னைக்குப் பல புதிய விளை யாட்டரங்கங்கள், புதிய விளை யாட்டுப் பூங்காக்கள் மற்றும் புதிய குடியிருப்பு வசதிகளை அளிக்கப் போகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியால் பிரம் மாண்டமான முறையில் நடை பெறவுள்ள பெருமைமிக்க இப் போட்டிகளால், சென்னை நகரின் வரலாற்றுச் சிறப்புக்கு ஒரு புதிய பரிமாணமும், தமிழக விளை யாட்டுத்துறை வளர்ச்சிக்கு ஓர் உறுதியான அடித்தளமும் கிடைக் கப் போகிறது. அந்த வகையில் இந்தியர் அனைவரும் பெருமை கொள்ளலாம்.



# விளையாட்டுத்துறையில் வேகமான வளர்ச்சி



★ கலைக் கல்லூரிகளில், பட்டப்படிப்பு வகுப்புகளில் 3 சதவிகிதம், மேல்பட்டப்படிப்பு வகுப்புகளில் 2 சதவிகிதம், என்று விளையாட்டு வீரர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வரும் வயதான விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை ரூ.75 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஊரக விளையாட்டு மையங்கள்

★ கிராமத்து இளைஞர்களிடையே புதைந்து கிடக்கும் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர, 380 ஒன்றியங்களில் ஊரக விளையாட்டு மையங்கள் ரூ.38 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

## மாவட்ட விளையாட்டு அரங்கங்கள்

★ தற்போது 12 மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு அரங்குகள் உள்ளன. மேலும் மூன்று கட்டப்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி விளையாட்டுத் திறமைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

## மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

★ தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் முதன்முதலாக 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

சார்க் விளையாட்டுக் கிராமம் – மாதிரி





★ இளம் நீச்சல் வீரர் குற்றாலீசுவரனை, தமிழ்நாடு அரசு தத்தெடுத்துள்ளது. அவர் பங்குகொண்டு சாதனை படைத்த 3 நீச்சல் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அரசு அவருக்கு ரூ.12.37 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

**விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் குறிக்கோளை அடைய அரசு உதவி**

★ பெண்களுக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் தேசிய அளவில் பங்கேற்று, தங்கப்பதக்கம் வென்ற செல்வி ரூபா உன்னிகிருஷ்ணனுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து தருவிக்க அரசு ரூ.3.50 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது தவிர போட்டிகளில் அவர் பங்கேற்கச் செல்லும்போது, அதற்காகும் விமானப் பயணக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

★ 1994 ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் நடைபெற்ற இஸ்சின்ருயு உலகக் கராத்தேப் போட்டியில் பங்குபெற திரு சி. சோம்நாத் என்ற மாணவனுக்கு அரசு ரூ.1.20 இலட்சம் வழங்கியுள்ளது.

★ சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கடந்த ஆண்டு 1994 நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல், ஓட்டம், மிதிவண்டிப் பந்தயம் ஆகிய மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று, தாய்நாட்டுக்குப் பெருமை தேடித்தந்த செல்வி அமுதாவுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூ.60,000 மதிப்புள்ள மிதிவண்டி வழங்கினார்.

★ தமிழகத்தைச் சேர்ந்த அதிவேக மனிதர் திரு ஆனந்த நடராஜனுக்கு, இலண்டனில் தங்கி அதிவேக ஒட்டப்பந்தயத்தில் சிறப்புப் பயிற்சி பெற அரசு ரூ.2.50 இலட்சம் நிதியுதவி வழங்கியது.

★ இந்தியாவின் அதிவேக வீராங்கனை செல்வி சோலைமதியின் பெயரில் ரூ.2 இலட்சம் நிதி நிரந்தர வைப்பு செய்யப்பட்டுள்ளது. பெறப்படும் வட்டித் தொகையை தனது விளையாட்டுச் செலவுக்காக அவர் பயன்படுத்தலாம்.

★ பெங்களூரில் பிப்ரவரி 1995 இல் நடைபெற்ற, தேசிய முதுநிலைத் தடகளப் போட்டிகளில் பங்குபெற்று, வென்று பதக்கங்கள் பெற்ற வீரர் வீராங்கனைகள் 15 பேர்களுக்கு மொத்தம் ரூ.65,000 பணப் பரிசும், பாராட்டுக்களும் வழங்கப்பட்டுள்ளன.



பெங்களூரில் நடைபெற்ற தேசிய அளவிலான முதுநிலைத் தடகளப் போட்டிகளில் பங்கு பெற்ற தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனை களுக்கும் பணப் பரிசுகளை வழங்கி அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பாராட்டினார். காவல்துறைக் கூடுதல் தலைவர் டபிள்யூ ஐ. தேவாரம், இ.கா.ப., கல்வித்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (14.3.95)

---

இந்தியாவின் அதிவேக மனிதரான (Fastest Man) திரு. ஆனந்த நடராஜன் மற்றும் இந்தியாவின் அதிவேக வீராங்கனை (Fastest Woman) செல்வி சோலைமதி ஆகியோருக்கு பணப்பரிசுகளை வழங்கி தனது வாழ்த்துக்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக்கொண்டார். (14.3.95)

## படமும் செய்தியும்





பெங்களூரில் நடைபெற்ற தேசிய முதுநிலைத்தடகளப்போட்டிகளில் தங்கப் பதக்கத்தினை வென்றதற்காக விளையாட்டு வீரர் திரு. வெங்கடேஷ் பாபுவிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ. 3,000 ரொக்கப் பரிசினை வழங்கி பாராட்டினார்கள்



பெங்களூரில் நடைபெற்ற தேசிய முதுநிலைத் தடகளப் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தினை வென்றதற்காக விளையாட்டு வீராங்கனை ஆஞ்சலா லின்ஸிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ. 1,000/- ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார்கள். (14.3.95)

# நூல் நயம்

### பேச்சாளராக...

ஆசிரியர் : அ.கி. பரந்தாமனார்

வெளியீடு : அல்லி நிலையம்
19, முத்துமுதலி தெரு
சென்னை. 7

பக்கம்16 : 77 விலை : ரூ.20

மேடைப் பேச்சு இன்று ஒரு கலையாகவே வளர்ந்திருக்கிறது. கேட்பாரைக் கவர்கின்ற வகையிலே பேச்சுத் திறம் அமைய வேண்டும். சொல் வளமும், பொருள் வளமும் அதிலே இழைந்திட வேண்டும். அதற்கெல்லாம் வழிகாட்டுகிறது இந்நூல்.

மேடைப்பேச்சின் வரலாற்றில் தொடங்கி, பேச்சைத் தொடங்குவது எப்படி? பேச்சை முடிப்பது எப்படி? என்று இருபது தலைப்புகளிலே இனிய பல கருத்துக் களைத் தொகுத்துக் கூறுகின்றது இந்நூல். இளைய பேச்சாளர்களுக்குக் கையேடாக விளங்கும் இந்நூலை, பொதுவாக எல்லாரும் படிக்க வேண்டும்.

### சுயமாக முன்னேற சில வழிகள்

ஆசிரியர்: மா.பா. குருசாமி

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:36 விலை: ரூ.4

தற்காலத்தில் படித்தவர்கள், படிக்காதவர்கள் அனைவருமே, அரசாங்க வேலைகளையோ, தனியார் நிறுவன வேலைகளையோ தேடி அலைகின்றனர். அவ்வளவு பேருக்கும் அரசாங்கம் வேலை தருவது என்பது சாத்யமா?

நமக்கு நாமே எப்படிச் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறலாம் என்பதை நம்பிக்கையோடு விளக்கும் நூல்.

### இங்கர்சாலின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்

வெளியீடு: பாரதி நிலையம்
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை 600 017.

பக்கம்: 64 விலை: ரூ.8

அமெரிக்க அறிஞர் இங்கர்சாலைப் படம் பிடித்துக் காட்டுகின்றது இந்நூல். அவரது வாழ்க்கைக் குறிப்பு, அவருடைய கருத்துக்கள் முதலானவற்றை அழகுறத் தொகுத்துக் கூறுகின்றது. பெரியவர்களும், குறிப்பாக, பள்ளி மாணவர்களும் படிக்க வேண்டிய புத்தகம்.

-பி.வி.ஜி.

### ரூசோவின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்

வெளியீடு: பாரதி நிலையம்
108, உஸ்மான் சாலை
தியாகராய நகர்,
சென்னை 600 017.

பக்கம்: 65 விலை: ரூ.8

ஜெனீவா நாட்டுப் பேரறிஞரான ரூசோவின் வாழ்க்கைக் குறிப்புகளும், அவரது பொன்மொழிகளும் அடங்கிய நூல், இது. படிக்க, பயன்பெறத்தக்க கருத்துமணிகள் நிறைந்தவை.

### நீட்சேயின் நம்மைமேம்படுத்தும் எண்ணங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்

வெளியீடு: பாரதி நிலையம்,
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை 600 017.

பக்கம்: 64 விலை: ரூ.8

ஜெர்மானியத் தத்துவ ஞானியின் எண்ணங்கள், எழுத்துக்களோடு, அவரது வாழ்க்கைக் குறிப்பையும் சேர்த்துத் தந்துள்ளார் ஆசிரியர். அனைவரும் படிக்கலாம்.

- மறைமலை

### அப்பாவை அழைத்து வா!

ஆசிரியர்: மா. கமலவேலன்

வெளியீடு: விடியல் வெளியீட்டகம்
109, மேலைத் தெரு
கிருட்டிணராயபுரம்
திருச்சி 639 102

பக்கம்:108 விலை ரூ.14

இந்நூலில் உள்ள ஏழு நாடகங்களும், வானொலியில் ஒலிபரப்பப்பட்டும், பத்திரிகைகளில் வெளிவந்தும் பள்ளி மேடைகளில் நடிக்கப் பெற்றவை.

குழந்தைகளுக்கேற்ற படிப்பினைகளைக் கொண்ட நகைச்சுவையோடு கூடிய இந் நல்ல நாடகங்களை அனைவரும் விரும்புவர்.

### போஜ ராஜன் கதைகள்

ஆசிரியர்: இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு: மணி பதிப்பகம்
58, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு
இராயப்பேட்டை
சென்னை 600 014

பக்கம்:96 விலை ரூ.12

நீதிகள் பலவற்றை நகைச்சுவையோடு கூறும் நல்ல சிறுகதைகள். போஜராஜன், கவி காளிதாசன் ஆகியோர் காலத்தில் நடந்த சம்பவங்கள் அவர்களின் புத்திக் கூர்மையையும், திறமையான செயல்பாடுகளையும் விளக்குகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

